# உதயன்

சுடர் : 36 கதிர் : 193 | திங்கட்கிழமை | வைகாசி 24 ஆம் நாள் 07 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


# யாழில் ஜூன் 10 இல் இரண்டாம் கட்டத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 7

கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணத்துக்கு இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் எதிர்வரும் 10ஆம் திகதி கிடைத்துவிடும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரான கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார். 15



## தடுப்பூசி வழங்கலில் தவறுகள்

ஒப்புக்கொண்டது அரசு

கொழும்பு, ஜூன் 7

கொரோனாத் தடுப்பூசி வழங்கல் நடவடிக்கையின்போது நிர்வாக ரீதியான தவறுகள் காணப்பட்டமை உண்மை. அதனை அரசு அடையாளம் கண்டுள்ளது என்று அமைச்சரவைப் 15

## தடுப்பூசி ஏற்றலுக்கான புதிய ஒழுங்கு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

கொரோனாத் தடுப்பூசி ஏற்றுவதற்கான முன்னுரிமை ஒழுங்கு புதிதாகத் திருத்தி வெளியிடப்பட்டுள்ளது. 15

## பயணக் கட்டுப்பாட்டை தளர்த்தினால் ஆபத்து

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 7

பயணக் கட்டுப்பாட்டை தளர்த்தினால் நிலைமை இன்னும் மோசமடையும் சாத்தியக் கூறுகளே காணப்படுகின்றன. அதற்காக நாட்டை தொடர்ந்தும் முடக்கி வைத்திருக்க முடியாது. எனவே தடுப்பூசி ஏற்றல் உள்ளிட்ட விடயங்களில் முகாமைத்துவ உத்திகளை கையாள வேண்டும். அதன் ஊடாகவே படிப்படியாக பயணக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி 15

## இயற்கைப் பேரிடர்: 16 பேர் துயரச் சாவு!

மூவர் மாயம்: ஐவர் காயம்

கொழும்பு, ஜூன் 7

அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16ஆக அதிகரித்துள்ளது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மாலை விடுத்துள்ள நாளாந்த நிலவர 15



## காணாமலாக்கப்பட்ட மகனைத் தேடிய தாய் உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 7

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிய தாய் ஒருவர் உயிரி 15

## சுன்னாகம் மயிலங்காட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சைக்கு செல்ல மறுப்பு

நீண்ட இழுபறியின் பின்னர் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

சுன்னாகம் மயிலங்காடு பகுதியில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்கள் கொரோனா சிகிச்சைக்காக அமைக்கப்பட்டிருக்கும் பிரத்தியேக சிகிச்சை நிலையங்க 15

## கொரோனா 2,976

கொழும்பு, ஜூன் 7

நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 976 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் 15

## கொவிட் 19 யாழ்ப்பாணத்தில் இருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 7

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணத்தில் கடந்த 15

## ஆடைத் தொழிற்சாலையால் மிகப்பெரும் ஆபத்து வரும்

உரியவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என வலியுறுத்துகின்றார் துரைராசா ரவிகரன்

முல்லைத்தீவு, ஜூன் 7

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை இன்று திறக்கப்படுகின்றது. இதனால் ஏற்படப் போகும் விளைவுகளை உரியவர்கள் 14

## பயணத் தடையை மீறுவோரை உடனே தனிமைப்படுத்துங்கள்

பொலிஸ்மா அதிபர் அதிரடி உத்தரவு

கொழும்பு, ஜூன் 7

போக்குவரத்துத் தடைகளை மீறி வீதிகளில் பயணிக்கும் மக்களைத் தனிமைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு நாட்டின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் 15

## அரசடியில் 55 பேருக்கு நேற்றுத் தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் கீழ் உள்ள, நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அரசடிப் பகுதியில் 55 பேருக்கு நேற்றுத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மே மாதம் 29ஆம் 14

## வடக்கில் சடுதியாக தொற்று அதிகரிப்பு

671 பேருக்கான சோதனையில் 147 பேருக்குத் கொரோனா

யாழ்ப்பாணம், ஜூன் 7

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை நேற்றுத் திடீரென 14


செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....

செய்தி: 021 493 0000, 077 1209994

விளம்பரம்: 021 493 1111, 071 6182182


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# ஆடைத் தொழிற்சாலை இயங்குமானால் வர்த்தக நிலையங்களையும் திறப்போம்

## புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம் எச்சரிக்கை




முல்லைத்தீவு, ஜூன் 7
புதுக்குடியிருப்பு மக்களின் இந்த நிலைக்குக் காரணமாக இருந்த ஆடைத் தொழிற்சாலை இயங்குமாக இருந்தால், வர்த்தக நிலையங்களையும் நாங்கள் திறப்போம் என்று புதுக்குடியிருப்பு வர்த்த சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த சங்கத்தினர் மேலும் தெரிவிக்கையில்; புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தற்போது கொரோனாத் தொற்று வேகமாகப் பரவிவருகின்றது. இது அனைவரும் அறிந்த உண்மை. ஒருவர் உயிரிழந்துள்ளார். 9 கிராம அலுவலர் பிரிவுகள் தொடர்ச்சியாக முடக்கப்பட்டுள்ளன. இவ்வாறு முடக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் இன்று இந்த ஆடைத் தொழிற்சாலை மீண்டும் இயங்க இருக்கின்றது என்ற செய்தி கிடைத்துள்ளது. ஆடைத் தொழிற்சாலையில் உள்ள பணியாளர்களுக்கு இன்று பணிக்கு வருமாறு தெரியப்படுத்தியுள்ளார்கள். அவ்வாறு இவர்கள் பணிக்குவந்தால் மீண்டும் ஒரு பெரும் ஆபத்தைச் சந்திக்க நேரிடும் என்பது அனைவருக்கும் தெரியும். பரவியுள்ள தொற்றானது இந்த ஆடைத் தொழிற்சாலையில் இருந்தே பரவியது. 15 பேருடன் ஆரம்பித்த தொற்று இன்று 600ஐக் கடந்துள்ளது நேற்றுமுன்தினம் முதலாவது மரணம் பதிவாகியுள்ளது. எனவே இந்த ஊரில் வாழ்கின்ற சமூக ஆர்வலர்கள், அரச பணியாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் கவனம் எடுத்து புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையை இன்னும் 14 நாள்களுக்குப் பின்னர், தொழிற்சாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரே திறக்க அனுமதிப்பது பொருத்தமானது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 350 வர்த்தகர்களைக் கொண்ட பெரிய சங்கம் எமது வர்த்தக சங்கம். இந்த சங்கமானது இன்று முற்றுமுழுதாக முடக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, மக்கள் அனைவரும் முடங்கியுள்ளதற்கு காரணமான இந்த ஆடைத் தொழிற்சாலை அதற்கு எந்தப் பொறுப்பும் கூறவில்லை. இந்த நிலையில் அதனை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுப்பது கண்டனத்திற்குரியது - என்றனர். (ப-19)

# ஓகஸ்ட்டின் பின்னரே கொரோனா அடங்கும்



கொழும்பு, ஜூன் 7
**நாட்டில் கொரோனாத் தொற்று ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னரே குறைவடையும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்து நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் புதுவருடத்தின் பின்னர் உருவான கொத்தணி ஓகஸ்ட் அல்லது செப்ரெம்பர் வரை நீடிக்கலாம்.


கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் உருவான கொத்தணி டிசெம்பர் மாதமளவிலேயே குறைவடைந்தது. எனினும் கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட காலங்களில் கொரோனா மீண்டும் அதிகரித்தது.

அது மார்ச் வரை நீடித்தது. தற்போதைய சித்திரைப் புத்தாண்டுக் கொத்தணி குறைவடைவதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

பொதுமக்கள் எசலபெரஹர போன்றவற்றில் கலந்துகொண்டு சுதந்திரமாக வெளியில் நடமாடினால், நோயாளிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கும். என்றார். (எ-4)

# சிறுநீரக நோயாளி ஒருவரும் கொரோனாவால் உயிரிழப்பு

## மட்டக்களப்பில் நேற்று இரண்டாவது உயிரிழப்பு



மட்டக்களப்பு, ஜூன் 7
கோறளைப்பற்று மத்தி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சிறுநீரக நோயாளி ஒருவரும் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார்.

பிறைந்துரைச்சேனை அறபா வீதியைச் சேர்ந்த 51 வயதுடைய சிறுநீரக நோயாளி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த சிறுநீரக நோயாளி நேற்றுமுன்தினம் இரவு வாழைச்சேனை ஆதார மருத்துவனையில், அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட நிலையில் நேற்றுக் காலை 11 மணியளவில் உயிரிழந்துள்ளார். (ப-150)

# 14 ஆம் திகதி பயணத் தடையை நீக்குவது பொருத்தமேயில்லை

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கமும் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 7
நாட்டில் தினசரி கொரோனா பாதிப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத் தடையை ஜூன் 14ஆம் திகதி நீக்குவது பொருத்தமில்லை என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலும் பலர் வழக்கம் போலவே நடந்துகொள்கின்றனர்.

பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் 90 சதவீத மக்களின் பயணங்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக எங்களால் எதிர்பார்த்த விகிதத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

நகரங்களிலும் கொழும்பிலும் உள்ள ஒவ்வோர் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களும் அத்தியாவசிய சேவைகளாக செயற்படுகின்றன.

அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் ஊழியர்களை அழைக்கின்றார்கள். அன்றாட தொழில்களில் ஈடுபடும் நபர்கள் மட்டுமே வீட்டில் தங்குகிறார்கள்.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மக்கள் சாதாரண அன்றாட நடைமுறைகளின் கீழ் செயற்படுகிறார்கள்.

ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், எந்தவொரு பொதுப் போக்குவரத்து முறையும் செயற்படவில்லை. அதற்கு பதிலாக, மக்கள் தங்கள் தனியார் வாகனங்களில் பயணம் செய்கிறார்கள் என்று ரோஹண மேலும் கூறினார். (த-இ)

# கொரோனாவால் மற்றுமொரு கர்ப்பிணிப் பெண்ணும் சாவு

## பிரசவ அறுவைச் சிகிச்சை இன்று மேற்கொள்ளப்படவிருந்த நிலையில் துயரம்

மட்டக்களப்பு, ஜூன் 7
கோறளைப்பற்று மத்திய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை ஆர்.டி.ஓ வீதியைச் சேர்ந்த 36 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டநிலையில், அவருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அவர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் இன்று அவருக்கு பிரசவ அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட இருந்த நிலையில் நேற்று வயிற்றில் சிசுவுடன் உயிரிழந்துள்ளார். (ப-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 லட்சம் சைனோ.'.போர்ம் தடுப்பூசிகள் இலங்கையை நேற்று வந்தடைந்தன

## நாளைமறுதினம் மேலும் 10 லட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறும்



**கொழும்பு, ஜூன் 7**

**சீனாவிடம் கொள்வனவுசெய்யப்பட்ட மேலும் ஒரு தொகுதி சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் நேற்று நாட்டை வந்தடைந்தன.**

இவ்வாறு ஒரு மில்லியன் தடுப்பூசிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இதுவரை கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகளில் ஒரே தடவையில் அதிகளவான தடுப்பூசிகள் இலங்கைக்கு வந்தது இதுவே முதல் தடவை. அத்துடன் இது இலங்கை கொள்வனவுசெய்த தடுப்பூசிகளாகும்.

சீனாவின் நன்கொடையால் வழங்கப்பட்ட 11 லட்சம் தடுப்பூசிகளும், நேற்றுக் கிடைக்கப்பெற்ற 10 லட்சம் தடுப்பூசிகளுமாக இதுவரை 21 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

அதேவேளை மேலும், ஒரு மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் நாளைமறுதினம் 9 ஆம் திகதி இலங்கைக்குக் கிடைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஓ.4.5)

# நீரில் மூழ்கி மீனவர் சாவு

## பூநகரியில் பரிதாபம்

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி, பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்விபுரம் மூலையடம்பன் குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பத் தலைவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பகல் இடம்பெற்றுள்ளது. மூன்று பிள்ளைகளின் தந்தையான 59 வயதுடைய பூநகரி செட்டியகுறிச்சியைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீரில் மூழ்கிய நிலையில் அவர் மீட்கப்பட்டு பூநகரி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (ப-113)

# சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் நான்கரை லட்சமே பங்கீடு!

கொழும்பு, ஜூன் 7

சீனாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கையை நேற்று வந்தடைந்த 10 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளில் 4 லட்சத்து 50 ஆயிரம் தடுப்பூசிகள் முதல் கட்டமாக 12 மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

மாத்தளைக்கு 25 ஆயிரம், நுவரெலியாவுக்கு 50 ஆயிரம், அம்பாந்தோட்டைக்கு 50 ஆயிரம், மட்டக்களப்புக்கு 25 ஆயிரம், திருகோணமலைக்கு 25 ஆயிரம், அம்பாறைக்கு 25 ஆயிரம், அநுராதபுரத்துக்கு 50 ஆயிரம், பொலநறுவைக்கு 25 ஆயிரம், குருநாகலுக்கு 25 ஆயிரம், புத்தளத்துக்கு 25 ஆயிரம், பதுளைக்கு 50 ஆயிரம், மொனராகலவுக்கு 25 ஆயிரம், கேகாலைக்கு 50 ஆயிரம் என்ற அடிப்படையில் அவை பங்கிடப்பட்டுள்ளன. (ஓ,5)




# 65 ஆயிரம் ஸ்புட்னிக் அடுத்த வாரம் வரும்

கொழும்பு,ஜூன் 7

ரஷ்யாவால் தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக் வி கொரோனாத் தடுப்பூசிகள் 65 ஆயிரம் அடுத்த வாரம் இலங்கைக்குக் கிடைக்கும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதனை ரஷ்யாவின் ஸ்புட்னிக்- வி தடுப்பூசி தயாரிப்பு நிறுவனமான கெமீலியா நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு கிடைக்கும் தடுப்பூசிகளில் முதல் டோஸ் செலுத்துகைக்காக 50 ஆயிரமும், இரண்டாம் டோஸ் செலுத்துகைக்காக 15 ஆயிரமும் பயன்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரஷ்யா ஏற்கனவே 65 ஆயிரம் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# பயணத் தடையிலும் வீதி விபத்துக்கள்

## அறுவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 7

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ள நிலையில் வீதி விபத்துக்களால் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த, 24 மணித்தியாலத்தில் இடம்பெற்ற வீதி விபத்துக்களால் இவர்கள் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் நான்கு பேர் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர்கள், ஒருவர் முச்சக்கரவண்டியின் சாரதி, மற்றவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதிலும் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. ஒரு நாளுக்குள் அதிக விபத்துக்கள் பதிவாகியுள்ளன. எனவே மக்கள் மேலும் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (எ-4)




# நாடாளுமன்ற அடுத்த அமர்வு செவ்வாயன்று?

கொழும்பு, ஜூன் 7

நாடாளுமன்றின் அடுத்த அமர்வு நாளை செவ்வாய்க் கிழமை இடம்பெறும். எனினும் அமர்வு நடத்தப்பட வேண்டிய நாள்கள் தொடர்பில் இன்று நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக் கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நடைமுறையிலுள்ள பயணக் கட்டுபாடுகளால் ஒரு நாள் மட்டுமே அமர்வை நடத்துவதற்கு அரசு ஆலோசித்து வருகின்றது. அதற்கமைவாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த மாதம் 21 ஆம் திகதியன்று இறுதியாக நடைபெற்ற சபை அமர்வின்போது, அடுத்த சபை அமர்வு நாளை 8 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-4)



# நிலச்சரிவில் சிக்கிய குடும்பம்; கண்டுபிடித்தது வளர்ப்பு நாய்

கொழும்பு, ஜூன் 7

நாட்டில் பெரும்பாலான இடங்களில் பலத்த மழை பெய்து வருவதுடன், மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் குடும்பமொன்று நிலச்சரிவில் சிக்கியபோது, அவர்கள் செல்லமாக வளர்த்த நாய், அவர்கள் புதையுண்ட இடத்தை இனங்கண்டு தோண்டி அவர்க ளைக் கண்டுபிடித்துள்ளது.

இந்தந் சம்பவம் தெவனகல மாவனெல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளது. முன்னதாக, பாதிக்கப்பட்டவர்களைத் தேடும் மீட்புப் பணியாளர்கள் சம்பவ இடம்நோக்கிச் செல்ல, அந்த நாயும் சம்பவ இடத்துக்கு வந்தது. எனினும் நாயை, பணியாளர்கள் விரட்டினர்.

ஆனால் அது திரும்பி வந்து அதன் முன் பாதங்களால் சேற்றைக் கிளறத் தொடங்கியது. நாய் தோண்டிய இடத்தில் பணியாளர்கள் மேலும் அகழ்ந்தனர். இதன்போது சேற்றுக்குள் புதையுண்ட நிலையில் ஒரு குடும்ப உறுப்பினர்கள் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த குடும்ப உறுப்பினர்களிடம் குறித்த நாய் செல்லமாக வளர்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவுக்கு அதிகமாகப் பணியாற்றுமாறு ஆசிரியர்கள் வற்புறுத்தப்படுகின்றனர்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூன் 7**

**ஆசிரியர்களை அளவுக்கு அதிகமாகப் பணியாற்ற சிலர் வற்புறுத்துகின்றனர் என்றும், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக வழங்கப்படும் பணத்தை வழங்க திணைக்களம் மறுக்கிறது எனவும் அறியப்படுகின்றது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

அரசால் எந்தவித வழிகாட்டுதல்களும் இல்லாமல், வளங்கள் எதுவுமே வழங்கப்படாத நிலையில் தமது சொந்தத் திறமைகளையும், மூளை வளத்தையும், மூலதனத்தையும் பயன்படுத்தி ஒலி, ஒளி, எழுத்து வடிவங்களிலும், இணையவழிமூலமான தொடர்பாடல், பண்பியல் வடிவங்களிலும் ஆசிரியர்கள் கல்வியைப் புகட்டுவது பாராட்டுக்குரியது. ஆசிரியத் தொழில் மகிமை பொருந்திய மகத்தான தொழில் என்பதற்கு அதன் அறுவடையே சான்றாகும். அதனை சீரிய முறையில் தமது இன்பதுன்பங்களை மறந்து பணியாற்றும் ஆசிரியர்கள் சான்றோர்களே. இதைவிட ஆசிரியர்களை அளவுக்கு அதிகமாகப் பணியாற்ற சிலர் வற்புறுத்துகின்றனர் என்றும், திணைக்களத்தால் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக வழங்கப்படும் பணம் வழங்க மறுக்கப்படுகிறது எனவும் அறியப்படுகின்றது. தயவுசெய்து காலச்சூழலை கருத்தில் கொண்டு நாம் அனைவரும் ஒருமித்துப் பயணிக்க வேண்டும். வற்புறுத்தல்கள் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்தல் இக்காலத்துக்கு பொருத்தமானது அல்ல. தமது நேரகாலத்தையும் பணத்தையும் விரயம் செய்து பணியாற்றுவோருக்கு மதிப்பளிப்பதோடு வாய்ப்பில்லாத மாணவர்களுக்கான வழிமுறைகளையும் தேடிக் கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ப)

# வங்கிகள் சில நாளைமுதல் சில தினங்களுக்குப் பூட்டு

கொழும்பு, ஜூன் 7

நாட்டின் தனியார் வர்த்தக வங்கிகள் சில நாளைமுதல் சில தினங்களுக்கு மூடப்படவுள்ளன. நாட்டில் விதிக்கப்பட்டுள்ள பயணத் தடை நடைமுறைகள் காரணமாகவே இந்த முடிவு என்று அந்த வங்கிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



### சட்டவிரோத

# மது உற்பத்தியில் ஈடுபட்டோர் கைது

## கோப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

கோப்பாயில் சட்டத்துக்குப் புறம்பாக மது உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில், கோப்பாயில் சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கோப்பாய் ஜி.பி.எஸ். வீதியில் உள்ள வீடொன்றிலேயே மேற்படி சட்டவிரோத நடவடிக்கை இடம்பெற்று வந்துள்ளது.

சந்தேக நபர்களிடம் இருந்து 14 போத்தல்களிலும், ஒரு கொள்கலனிலும் அடைக்கப்பட்ட நிலையில் கலப்பட மதுபானம் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு சந்தேகநபரிடம் இருந்து 90 ஆயிரத்து 900 ரூபா பணமும், இன்னொருவரிடம் இருந்து 49 ஆயிரத்து 550 ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்றனர். (ம)

# தேர்தலை நடத்த அரசு தயார் சூழ்நிலையே பொருத்தமில்லை

*கூறுகின்றார் இராஜாங்க அமைச்சர் ரணசிங்க*

கொழும்பு, ஜூன் 7

மாகாண சபைத் தேர்தலை இந்த வருடம் நடத்துவதற்கான சாத்தியம் மிக அரிதாகவே காணப்படுகிறது. தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாராக உள்ளது. ஆனால் தேர்தலை நடத்துவதற்கான பாதுகாப்பான சூழல் தற்போது காணப்படவில்லை. தேர்தல் முறைமை தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானங்களும் உறுதியாக எடுக்கப்படவில்லை.

இவ்வாறு, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் நோக்கத்துக்காக காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவோம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார். மாகாண சபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறையில் அதாவது பழைய தேர்தல் முறையிலா அல்லது புதிய தேர்தல் முறையிலா நடத்துவது என்ற சிக்கல் நிலை காணப்படுகிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என்ற நிலை காணப்பட்டது.

மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் கட்சித் தலைவர் மட்டத்தில் தீர்வு காண்பது அவசியம் என்று பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களின்போது தீர்மானம் எடுக்கப்பட்டது. பழைய தேர்தல் முறைமையில் இந்தமுறை மாத்திரம் மாகாண சபைத் தேர்தலை நடத்தி, எதிர்காலத்தில் புதிய தேர்தல் முறைமையை மறுசீரமைப்புச் செய்யலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியது. இதற்கமைய மாகாண சபைத் தேர்தலை கடந்த மார்ச் மாதம் இறுதி வாரத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டது. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக அனைத்துத் திட்டங்களும் தாமதப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த காலங்களைக் காட்டிலும் தற்போது புதுவருட கொவிட் கொத்தணியின் தாக்கம் சடுதியாக அதிகரித்துள்ளது. ஆகவே இவ்வாறான நிலையில் மாகாண சபைத் தேர்தலை இந்த வருடம் நடத்துவதற்கான சாத்தியம் மிக அரிதாகவே காணப்படுகிறது. எனினும், சுகாதார தரப்பினர் குறிப்பிட்டால் தேர்தலை நடத்துவோம். - என்றார். (து-இ)



அமெரிக்காவின் கலிபோர்னியா மருத்துவ சேவை ஆதரவு அறக்கட்டளை, கொழும்பு பொது மருத்துவ சேவை மன்றத்துக்கு அன்பளிப்புச் செய்த மருத்துவ உபகரணங்களை, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஆறு மருத்துவமனைகளுக்கு நேற்றுக் கையளித்தார். (து)

# காலநிலை மாற்றத்தின் பாதிப்பை குறைக்க உலக நாடுகளது கூட்டு நடவடிக்கை தேவை

## ஜனாதிபதி கோத்தா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

காலநிலை மாற்றம் என்பது மனித குலம் எதிர்கொள்ளும் மிகப் பாரதூரமான ஒரு பிரச்சினையாகும். அதன் பாதிப்பைக் குறைக்க, அனைத்து நாடுகளதும் உடனடியான கூட்டு நடவடிக்கை தேவைப்படுகின்றது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

உலக உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவின் 48ஆவது கூட்டத்தொடரின் விவசாய சூழலியல் நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப வாழ்க்கையை ஒழுங்கமைப்பதற்கான வழிமுறைகளை ஒவ்வொரு நாடும் வகுக்க வேண்டும். விவசாய சூழலியலைக் கைக்கொள்வதன் மூலம், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது இதன் ஒரு முக்கிய பகுதியாகும். நாம் வாழும் உலகின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, மனித சமூகத்தின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டுமென்றால், உலகெங்கிலும் உள்ள [illegible]ளைப் பின்பற்ற தயங்கக்கூடாது. இத்தகைய கொள்கைகள், சூழலியல் பாதுகாப்பை ஆதரிப்பதுடன், உயிர்ப் பல்வகைமை அழிவை எதிர்த்துப் போராட உதவ வேண்டும். மேலும், மக்கள் தங்கள் பொருளாதார அபிலாஷைகளை பல்வேறு பேண்தகு வழிகளில் அடையக்கூடியதாகவும் அவை இருக்க வேண்டும். இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில், செயற்கை உரங்கள், பூச்சி கொல்லிகள் மற்றும் களை கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது. எங்களது இந்த முடிவு, பரந்துபட்ட சூழலியல் பிரச்சினைகள் மற்றும் குறிப்பிடத்தக்க பொதுச் சுகாதாரக் கரிசனைகளை கவனத்தில் கொண்டு எடுக்கப்பட்டதாகும்.

செயற்கை உரங்கள் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்களின் பயன்பாடு பொதுமக்களிடையே தொற்றா நோய்கள் அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளது. பல தசாப்தங்களாக இவற்றை அதிகமாகப் பயன்படுத்தியதன் விளைவாக, இலங்கையின் மையப்பகுதிகளில் நீடித்த நோய்கள் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பெருமளவில் சந்தைகளை ஆக்கிரமித்துள்ள விவசாய இரசாயனப் பொருள்கள் மற்றும் விவசாயிகளிடையே போதியளவு கல்வியறிவின்மை காரணமாக, இலங்கையில் பயன்படுத்தப்படும் நைதரசன் உரங்களில் சுமார் 80 வீதமானவை விரயமாகின்றன என மதிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சும் உரங்கள் நிலத்தை மாசுபடுத்தி, நிலத்தடி நீரைச் சென்றடைகின்றன. இது மண்ணின் தரம் குறைவதற்கும் நீர் மாசுபடுவதற்கும் காரணமாக அமைவதுடன், பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை அதிகரிக்கவும் செய்கிறது.

இதன் காரணமாக செயற்கை உரங்கள் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்களின் இறக்குமதியைத் தடைசெய்வதற்கான எனது அரசின் தீர்மானமானது, ஆரோக்கியமான மற்றும் சூழலியல் ரீதியாகச் சிறந்த சேதன விவசாய முறைக்கு நீண்டகாலத் தேவைப்பாடாக இருந்துவரும் தேசிய மாற்றத்துக்கு வழிவகுக்கும் - என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பிணத்தை வைத்து பிச்சை எடுத்தல்


'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் எரிந்ததும் ஒருவகையில் நல்லதே. ஏனெனில் சரிந்து கொண்டு செல்லும் இலங்கைப் பொருளாதாரத் தட்டி நிமிர்த்த, அந்தக் கப்பல் நிறுவனத்திடம் வாங்கும் நஷ்டஈடு உதவியாக இருக்கும்" இப்படி திருவாய் மலர்ந்துள்ளார் பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சியான இடதுசாரி முன்னணியின் வாசுதேவ நாணயக்கார. ஒருகாலத்தில் மக்களின் நலனை முன்னிறுத்தி செயற்பட்ட ஒரு இடதுசாரித் தலைவராக இருந்த வாசுதேவ நாணயக்கார, முற்றுமுழுதாக முதலாளித்துவக் கொள்கையை வரித்துக்கொண்டமையை அவரது இந்தக் கூற்றில் இருந்து அறிந்துகொள்ளமுடியும்.

அத்தோடு பிணங்களை வைத்து பிச்சை எடுக்கும் இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையையும் உணரமுடிகின்றது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் எப்படி தீ பரவியது என்பதே இன்னமும் மர்மமாக உள்ள நிலையில், அதனால் உண்டான சூழலியல் பாதிப்புகள் இனிவரும் காலங்களிலேயே இலங்கையில் வெளிப்படக்கூடும். இப்போதே கப்பல் தரித்து நின்ற கடற்பரப்பைச் சூழவுள்ள பகுதிகளில் கடல்வாழ் ஜீவராசிகளின் உயிரற்ற உடல்கள் கரையொதுங்கத் தொடங்கிவிட்டன. பெரும் எண்ணெய்ப்படலம் கரையோரமெங்கும் படிந்து உறைந்துள்ளது. பிளாஸ்டிக் மூலப்பொருள்கள் கடற்கரையில் குவிந்துள்ளன. இதைவிட அந்தக் கப்பலில் இருந்தன எனச் சொல்லப்படும் தொன் கணக்கிலான– ஆபத்தான இரசாயனங்களும் – கடலோடு கலந்துவிட்டன. இதனால் என்னென்ன மாற்றங்களை இலங்கைக் கடற்பரப்பு சந்திக்கப்போகின்றது என்பதை எவராலும் ஊகிக்கவே முடியாதுள்ளது. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், இந்த விபத்தால் உண்டாகப் போகும் பின்விளைவுகளை கணிக்கவோ, தடுக்கவோ தேவையான விஞ்ஞான தொழில்நுட்ப வல்லமை இலங்கையிடம் இல்லவேயில்லை. இந்தநிலையில் அமைச்சர்கள் ஒவ்வொருவரும், திடீர் விஞ்ஞானிகளாக மாறி 'கப்பல் தீப்பற்றியதால் எந்தப் பாதிப்பும் வராது' என்று அறிக்கை மேல் அறிக்கை விடுகிறார்கள். வாசுதேவ போன்றோரோ, கப்பல் எரிந்த சம்பவத்தை எப்படி காசாக்கலாம் என்று அரசாங்கத்துக்கு 'ஐடியா' சொல்கிறார்கள்.

கோத்தாபய அரசாங்கத்துக்கு சூழல்மீது கிஞ்சித்தும் அக்கறை கிடையாது என்பதை பல சம்பவங்கள் எடுத்துக்காட்டி விட்டன. அதிலும் யுனெஸ்கோவால் பாதுகாக்கப்பட்ட காடான, சிங்கராஜ வனத்துக்கு குறுக்காக வீதி ஒன்றை அமைத்தமையும், அதே வனத்துக்கு சமீபமாக செயற்கையாக இரு நீர்நிலைகளை அமைக்க நடவடிக்கை எடுத்தமையும், இயற்கையை மறுதலித்து கடலை மண்ணால் நிரப்பி உருவாக்கப்பட்ட துறைமுக நிதி நகரமும், இந்த அரசாங்கத்துக்கு சூழல்மீது எந்தளவு தொலைநோக்குப் பார்வையும், அக்கறையும் உள்ளது என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றன. அத்தோடு இருக்கின்ற இயற்கை வளங்களை இயலுமட்டும் சுரண்டி அதனைக் காசாக்குவது மட்டுமே கோத்தாபய அரசாங்கத்தின் இலக்காக உள்ளது. அதற்கு பக்கப்பாட்டு பாடும் பங்காளிகளை வைத்து நியாயப்படுத்தும் வேலைகளையும் இந்த அரசாங்கம் செய்யத்தவறவில்லை. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் கடலில் கலந்த இரசாயனனங்களால் எதிர்காலத்தில் இலங்கையில் அமில மழை பொழியக்கூடிய அபாயமும் ஏற்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அமிலமழை பொழிந்தாலென்ன, மல மழை பொழிந்தாலென்ன தங்களுக்கு காலாதி காலத்துக்கும் தேவையான சொத்தை சேர்த்துவிட்டால் போதுமென்ற எண்ணத்தோடு செயற்படும் அரசாங்கத்திடம் மக்கள் நலனையோ, சூழல் நலனையோ எதிர்பார்ப்பதை விடவும் மடத்தனம் வேறுண்டா?



# பயணக் கட்டுப்பாட்டை மீறிய 6 வர்த்தக நிலையங்களுக்கு 'சீல்'

### வவுனியாவில் சுகாதாரப் பிரிவு நடவடிக்கை

**வவுனியா, ஜூன் 7**

**வவுனியாவில் பயணக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட 6 வர்த்தக நிலையங்கள், சுகாதாரப் பிரிவினரால் நேற்று 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளதுடன், 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.**

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நாடு முழுவதும் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்கள் தங்களுக்கான அத்தியாவசிய தேவைகளைப் பெறும் வகையில் அவற்றை வீடு வீடாகச் சென்று வழங்குவதற்கு பிரதேச செயலகங்கள் ஊடாக சில வர்த்தக நிலையங்களுக்கு பாஸ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகம் ஊடாக வீடு வீடாகப் பொருள்களை விநியோகிப்பதற்கு அனுமதி பெற்றுக்கொண்ட வர்த்தக நிலையங்கள் தொடர்பில் விசேட சோதனை நடத்திய சுகாதாரப் பிரிவினர் வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் பயணக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடு வீடாகப் பொருள்களை வழங்குவதற்கு வழங்கப்பட்ட பாஸ் அனுமதியை முறைகேடாகப் பயன்படுத்திய வர்த்த நிலையங்கள் ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தனர். அதன்படி நான்கு பல சரக்கு வியாபார நிலையங்கள், பாண் விற்பனை நிலையம் மற்றும் ஸ்ருடியோ ஒன்று என 6 வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவால் 'சீல்' வைத்து மூடப்பட்டன. குறித்த வர்த்தக நிலையங்கள் 14 நாள்கள் சுகாதாரப் பிரிவால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (ப-18)

## தொற்றாளர்களாக மன்னாரில் இதுவரை 522 பேர் அடையாளம்

மன்னார், ஜூன் 7

மன்னாரில் இதுவரை 522 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த மாதம் 15 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இந்த வருடம் 505 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். மொத்தமாக மன்னார் மாவட்டத்தில் 522 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த மூன்றாம் திகதி மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட383 பி.சி.ஆர்.பரிசோதனையில் மன்னார், வவுனியா, அரிப்பு, சாந்திபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 6 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதே தினம் மடுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 132 பி.சி.ஆர் பரிசோதனையில் இரண்டு பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்-என்றார். (ப-213)

## 2 ஆவது 'டோஸ்' கட்டாயம்

கொழும்பு,ஜூன் 7

சீனத் தடுப்பூசிகளான சைனோவெக் மற்றும் சைனோஃபோர்ம் ஆகிய தடுப்பூசிகளின் இரண்டாம் டோஸைச் செலுத்திக்கொண்ட பின்னரே, நோய் எதிர்ப்பு சக்தி வளர்ச்சியடையும் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். இதனால் சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதல் டோஸைச் செலுத்திக்கொண்டவர்கள், இரண்டாவது டோஸையும் கட்டாயமாகச் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## யால சரணாலயம் நாளை திறப்பு

யால சரணாலயத்தை நாளை மட்டும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு வருகை தந்துள்ள பிரான்ஸ் கடற்படையினருக்காக இந்த சரணாலயம் திறக்கப்படவுள்ளது.

நாளை மட்டும் சரணாலயத்தைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் கடற்படைக்குச் சொந்தமான கப்பலொன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளது. எனினும், இரு நாடுகளின் கடற்படையினர்களுக்கு இடையில் பயிற்சிகள் ஏதும் நடைபெறமாட்டாது. பிரான்ஸ் கடற்படையினரின் சுற்றுலாப் பயணங்கள் அனைத்தும் சுற்றுலாத்துறை அமைச்சின் மேற்பார்வையில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத் தடையை 21வரை நீடிக்கவும்

## சுகாதாரத் துறையினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 7

**கொரோனா வியாபிப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக, நாடு முழுவதும் தற்போது நடைமுறையில் இருக்கும் பயணத் தடைக் கட்டுப்பாடுகளை, மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்குமாறு சுகாதாரத் தரப்பினர், அரசிடம் யோசனையொன்றை முன்வைத்துள்ளனர் என்று கொழும்பு சுகாதாரத் தரப்பிடமிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.**

அவ்வாறு செய்யாவிடின், பயணத் தடை விதிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் பிரயோசனமற்றவையாகிவிடும் என்பதுடன் சரியான பெறுபேறுகளும் கிடையாது என்றும் சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை, நாளொன்றுக்கு 3 ஆயிரத்தைத் தாண்டியுள்ளமை தீவிரமான நிலைமையாகும். அதனையும் கட்டுப்படுத்த வேண்டுமாயின், பயணத் தடைக் கட்டுப்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் சுகாதாரத் தரப்பினர், அரசிடம் முன்வைத்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், இலங்கை மருத்துவ சங்கமும், இதே காரணங்களைக் குறிப்பிட்டு மூன்று பக்கங்கள் அடங்கிய கடிதமொன்றை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு, கடந்த இரண்டாம் திகதி அனுப்பிவைத்துள்ளது என்றும் அறியமுடிகின்றது.

கொரோனா வைரஸ் தொற்று சீக்கிரமாக வியாபித்ததையடுத்து, அதனைக் கட்டுப்படுத்துவதற்காக, நாடு முழுவதும் மே 21ஆம் திகதி தொடக்கம் பயணத் தடைக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அந்தப் பயணக்கட்டுப்பாடுகள் மே 25ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்பட்டு, அன்றிரவு 11 மணிக்கு மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. அந்தப் பயணத் தடைக் கட்டுப்பாடுகள் 7ஆம் திகதியான இன்று நீக்கப்படும் என்று தீர்மானித்திருந்தபோதும், நிலைமை மோசமாகவே நீடித்ததால், எதிர்வரும் 14ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளன. எனினும், இந்தக் காலப்பகுதியில்கூட தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், பயணத் தடைக் கட்டுப்பாடுகளை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடிக்குமாறு சுகாதாரத் தரப்பினர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-இ)

## கொரோனாவைக் கட்டுப்படுத்த ரூ. 286 பில்லியனை அரசு செலவிட்டது



கொழும்பு, ஜூன் 7

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் செயற்றிட்டத்துக்கு இதுவரை 286 பில்லியன் ரூபாவை, அரசு செலவிட்டுள்ளது என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசு தடுப்பூசிக்காகவே பெருந்தொகை நிதியைச் செலவிட்டுள்ளது. மேலும் நிவாரணக் கொடுப்பனவும் உரிய வாறு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்டி மாவட்டத்துக்கு எதிர்வரும் நாள்களில் ஸ்புட்னிக்-வி தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-இ)

## கொரோனாவால் அதிகம் முதியோரே உயிரிழப்பு



கொழும்பு, ஜூன் 7

கொரோனாத் தொற்றால் முதியவர்களின் உயிரிழப்பு அதிகரித்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் செனால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்புக்களில் 60 வீதமான உயிரிழப்புக்கள் கடந்த ஒன்றரை மாதங்களில் நிகழ்ந்துள்ளன.

இதுவரை கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்புகளில் 58 வீதமானவை இந்த அலையிலேயே இடம்பெற்றுள்ளன.

உயிரிழந்தவர்களில் 73 முதல் 75 வீதமானவர்கள் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள். இதன் அர்த்தம் வைரஸ் எங்கள் வீடுகளுக்குள் நுழைந்துள்ளது என்பதே. கடந்த அலைகளில் வீடுகளில் உயிரிழப்புக்கள் இவ்வளவு தூரம் இடம்பெறவில்லை.

வைரஸ் தொற்று தற்போது அச்சம் தரும் வேகத்தில் காணப்படுகின்றது. இது மிகவும் ஆபத்தான நிலைமை - என்றார்.

(எ-4)

## 24 போத்தல் கசிப்புடன் உரும்பிராயில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 7

உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் வீட்டில் வைத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 34 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கோப்பாய் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய சிவில் உடையில் சென்ற பொலிஸார் சந்தேக நபரின் வீட்டை முற்றுகையிட்டு சோதனையிட்டனர். இதன்போது 24 போத்தல்களில் கசிப்புக் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டார்.

(ம-25)



## 995 பேர் கைது



கொழும்பு, ஜூன் 7

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் 995 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சரியான முறையில் முகக்கவசம் அணியாமை மற்றும் மாகாண எல்லைகளைக் கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய இதுவரை 23 ஆயிரத்து 945 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

(எ-4)

# ஜூன் 14 முடக்கம் தளருமா? மக்களின் கைகளிலேயே முடிவு

## பொலிஸ் பேச்சாளர் மீண்டும் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

'நாடெங்கும் முழுநேரப் பயணத் தடை அமுலில் உள்ளது. இதை உணர்ந்து மக்கள் செயற்பட வேண்டும். எதிர்வரும் 14ஆம் திகதி பயணத்தடையை நீக்குவதா? இல்லையா? என்பது மக்களின் கைகளில்தான் உள்ளது இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

'தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மக்கள் நாட்டில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் தமது ஒத்துழைப்பை சுகாதாரத்துறைக்கு வழங்க வேண்டும். பயணத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ள காலகட்டத்தில் மக்கள் தங்கள் வீடுகளில் இருந்தால் மட்டுமே ஜூன் 14ஆம் திகதி நாட்டை மீண்டும் திறக்க முடியும்.

அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் பொதுமக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறிச் செல்ல வேண்டும். நேற்று (நேற்றுமுன்தினம்) மட்டும் தனிமைப்படுத்தல் விதிகளை மீறியதற்காக 975 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு, மேல் மாகாணத்துக்குள் வரும் 14 நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் உள்ள சோதனைச்சாவடிகளில் 59 ஆயிரத்து 280 வாகனங்கள் கொழும்புக்குள் நுழைந்துள்ளமை பதிவாகியுள்ளன' - என்றார்.

(ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவி எரிந்து சாவு


கொழும்பு, ஜுன் 7
மொரட்டுவை, சொய்சாபுர அடுக்கு மாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீப் பரவலில் பல்கலைக்கழக மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
குறித்த குடியிருப்பில் 3ஆவது மாடியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் தீப்பரவல் ஏற்பட்டது.
மொரட்டுவை பிரதேச சபையின் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். எனினும், குறித்த மாணவி தீயில் கருகி உயிரிழந்துள்ளார்.
குறித்த மாணவி தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.
சம்பவம் குறித்த மேலதிக விசாரணையை மொரட்டுவப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-22)




# 8 மாவட்டங்களில் டெங்கு அபாயம்

கொழும்பு, ஜுன் 7
**நாட்டில் 8 மாவட்டங்களில் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

அதற்கமைவாக கொழும்பு, களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் டெங்கு பரவும் அபாயமுள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், மருத்துவர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்த போதிலும், கடந்த மே மாதத்தில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிக டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 7 ஆயிரத்து 873 டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் நால்வர் உயிரிழந்துள்ளனர். கடந்த மே மாதத்தில் மட்டும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுமார் 800 டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இவர்களில் மூன்றில் ஒரு வீதமானோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.
இதனால் எதிர்வரும் நாள்களில் மேல் மாகாணத்தில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். தற்போது நிலவும் சீரற்ற வானிலையால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பாதிப்பால், நீர் தேங்குவதன் காரணமாக, எதிர்வரும் ஒரு மாதத்தில் மீண்டும் டெங்கு பரவும் அபாயமுள்ளது- என்றார். (எ-4)



# திருத்தி வழங்கப்பட்டன ஒட்சிசன் ரெகுலேடர்கள்



திருமலை, ஜுன் 7
திருகோணமலைமூதூர் தள மருத்துவமனை நோயாளிகளின் நலன்கருதி நோயாளிகளுக்கு ஒட்சிசன் வழங்கப் பயன்படும் 14 அத்தியாவசிய மருத்துவ ஒட்சிசன் ரெகுலேட்டர்கள் திருத்தி வழங்கப்பட்டுள்ளன.
இலங்கை பொதுஜன பொறியியல் முன்னணியின் திருகோணமலை பிரிவால் அந்த ஒட்சிசன் ரெகுலேட்டர்கள் திருத்தப்பட்டுள்ளன. இந்த ஒட்சிசன் ரெகுலேடர்களை கிழக்கு மாகாண ஆளுநரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் பொறியாளர் மகேஷ் சதுரங்க, மூதூர் தள மருத்துமனையின் மருத்துவ அத்தியட்சகர் பீ.கயல்விழியிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.
ஒட்சிசன் ரெகுலேட்டர் ஒன்றின் பெறுமதி 48 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. (ப-இ)



# தொற்றிலிருந்து மீண்டார் அத்துகோரள எம்.பி

கொழும்பு, ஜுன் 7
திருமலை, மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான கபில நுவன் அத்துகோரள, கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தார்.
கொவிட் தொற்றுக்கு உள்ளான அவர், அங்கொடை ஐ.டி.எச் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அந்த நோயில் இருந்து குணமாகி நேற்றுமுன்தினம் அங்கிருந்து வெளியேறினார். (ப-இ)

# குறுந்தகவலால் வந்தது வினை

## எண்மர் மருத்துவமனையில்

கொழும்பு,ஜுன் 7
பொரளையில் பெண் ஒருவரால் அயல்வீட்டாருக்கு, அனுப்பப்பட்ட குறுந்தகவலால், இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதனால் எட்டுப் பேர் காயமடைந்தனர்.
பெண் ஒருவர் தனது தொலைபேசியில் இருந்து, அயல் வீட்டு நபருக்கு குறுந்தகவல் அனுப்பியுள்ளார். இதனை அறிந்த குறித்த பெண்ணின் கணவர், அது யாருக்கு அனுப்பப்பட்ட குறுந்தகவல் என்று கேட்டுள்ளார்.
அதற்கு அந்தப் பெண் தவறுதலாக அனுப்பியது என்று மழுப்பியுள்ளார். இதனையடுத்து கணவர் அயல் வீட்டு நபருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இருவருக்கும் இடையிலான விவகாரம் பின்னர், இரு குடும்பங்களின் அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கி மோதலை உருவாக்கியது.
மோதலில் குறித்த பெண்ணின் கணவரும், அயல்வீட்டு நபரும் கத்திகுத்துக் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவத்தில் மேலும் அறுவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# தடுப்பூசி வழங்கல் திருமலையில் நாளை

திருகோணமலை, ஜுன் 7
கிழக்கு மாகாணத்தில் நாளை செவ்வாய்க்கிழமை 8ஆம் திகதி தொடக்கம் கொவிட்-19 தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.
கிழக்கு மாகாணத்தில் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகின்ற இன்றைய காலகட்டத்தில் பொதுமக்களுக்கான தடுப்பூசி எப்போது செலுத்தப்படும் என்று கேட்டபோது அவர் இதனை தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
குறித்த கொரோனாத் தடுப்பு ஊசிகள் எதிர்வரும் திங்கட்கிழமை (இன்று) எமக்கு கிடைக்க உள்ளன. கிழக்கு மாகாணத்துக்கு எவ்வளவு தொகை என்பது இதுவரை சொல்லப்படவில்லை.
எனினும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (நாளை) தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.
அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளாக திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்கள் காணப்படுகின்றன.
இருந்தபோதிலும் திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன என்றும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.
கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட முதல் மூன்று பிரதேசங்களுக்கும் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், அடுத்த கட்டமாக கல்முனைப் பிராந்தியத்தில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் அரச ஊழியர்கள், கர்ப்பிணிகள் மற்றும் முன்னணி செயற்பாட்டாளர்கள் போன்றோருக்கும் குறித்த தடுப்பூசியை வழங்க உத்தேசித்துள்ளோம் என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

# மாகாண ரீதியில் ஆங்கில மொழி பாடசாலைகள்

கொழும்பு, ஜுன் 7
மாகாண ரீதியில் ஆங்கில மொழி மூலப் பாடசாலைகளை ஆரம்பிக்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.
இது தொடர்பாக ஆராய்வதற்கு நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு அமைவாக எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக நுகெகோட விஜயராம கல்லூரி, ஆங்கில மொழி மூலப் பாடசாலையாக மேம்படுத்தப்படவுள்ளது. சர்வதேச பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கைவிடுக

## அமெரிக்காவுக்கு கடிதம்

கொழும்பு,ஜூன் 7

**இலங்கைக்கு எதிராக, அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினரால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தைக் கைவிட வேண்டும் என்று இலங்கை அமெரிக்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க, கடிதம் மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான துல்லியமற்ற, பக்கச்சார்பான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை உள்ளடக்கிய தீர்மானத்தை இலங்கை எதிர்க்கின்றது. தீர்மானத்தின் நோக்கம் தொடர்பில் எமக்கு சந்தேகம் உள்ளது.

1997 ஆம் ஆண்டில் அமெரிக்காவால் தடைசெய்யப்பட்ட, உலகின் மிகவும் ஆபத்தான பயங்கரமான அமைப்பு என்று குறிப்பிட்ட விடுதலைப்புலிகள் அமைப்பை, ஆயுதமேந்திய சுதந்திரத்துக்கான அமைப்பு என்று தீர்மானத்தில் குறிப்பிடுவது, அதன் நோக்கத்தைப் புலப்படுத்துகின்றது.

குறிப்பிட்ட தீர்மானம் பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதுடன், இலங்கை அரசின் இயல்பையே கேள்விக்குள்ளாக்குகின்றது என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (எ-4)

# இரசாயன உரத்தடையால் உணவுக்குப் பற்றாக்குறை

## எதிர்வுகூறுகிறார் கபிர் ஹாசீம்



கொழும்பு, ஜூன் 7

நாட்டில் சுகாதாரம் உட்பட மக்களின் தேவைகள் பலவற்றில் தோல்வியைக் கண்டுள்ள அரசு, இரசாயன உர இறக்குமதியைத் தடை செய்துள்ளதன் மூலம், உணவுப் பற்றாக்குறையை ஏற்படுத்தவுள்ளது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபிர் ஹாசீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உணவு களங்சியப்படுத்தலைப் பாதுகாப்போம் என்று தெரிவித்தே ஆட்சியாளர்கள் ஆட்சிபீடமேறினர். ஆனால் இரசாயன உர இறக்குமதியை முறையற்ற விதத்தில் நிறுத்தியுள்ளனர். இதனால் இன்னும் சில மாதங்களில் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும். உரத்தை நிறுத்தி உணவுக் களஞ்சியப்படுத்தலை அரசு காட்டிக்கொடுத்துவிட்டது.

அத்துடன் இதுவரை எரிபொருள் களஞ்சியப்படுத்தலை எரிபொருள் கூட்டுதாபனமே முகாமைத்துவம் செய்து வந்தது. ஆனால், தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்து, எரிபொருள் களஞ்சியப்படுத்தலிலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் சுகாதாரப் பாதுகாப்பும் இல்லாமல் போயுள்ளது. மறுபுறம் நிதி முகாமைத்துவமும் சீரழிந்துள்ளது - என்றார். (எ-4)

# புத்தரின் போதனைகளுக்கு எதிராக சூழலை நாசமாக்கும் ஆட்சியாளர்கள்

## ஐ.தே.க. சாடல்

கொழும்பு, ஜூன் 7

புத்தரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்ட நாட்டில் 'ஒட்சிசனை வைத்து என்ன செய்வது?' என்று கேட்கும் அரசியல்வாதிகள் உருவாகியிருப்பது கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாகச் சாடியுள்ளது.

நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே அந்தக் கட்சி இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது.

புத்தர் தான் இந்த உலகில் தோன்றிய குறிப்பிடத்தக்க சூழலியலாளர். பௌத்த தர்மம் அனைத்து உயிர்களையும் மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளது.

அத்தகைய அடிப்படைப் பின்னணியொன்றைக் கொண்ட நாட்டில் இப்போது 'ஒட்சிசனை சாப்பிட முடியுமா?' என்று கேட்கின்ற அரசியல்வாதிகள் உருவாகியிருக்கிறார்கள். காடுகளையும் மரங்களையும் பாதுகாப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும்போது, அவர்களிடம் 'ஒட்சிசனை வைத்து என்ன செய்வது?' என்று அரசியல்வாதிகள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

பல்வேறு இராசாயனப் பொருள்களைக் கொண்ட கப்பலை இலங்கைக் கடற்பரப்புக்குள் கொண்டுவந்து, சூழலை முழுமையாக நாசமாக்கியிருக்கிறார்கள். புத்தரின் போதனைகளையும் பௌத்தர்கள் என்ற சிந்தனையையும் தேர்தல் பரப்புரைகளில் மீண்டும் மீண்டும் கூறி ஆட்சிப்பீடமேறியவர்கள், இப்போது அவரது போதனைகளுக்கு எதிராக சுற்றுச்சூழலை அழித்துக் கொண்டிருக்கிறார்கள் - என்றுள்ளது. (ஒ.இ)

# 6 நிறுவனங்கள் நாமலின் வசம்

கொழும்பு, ஜூன் 7


இலங்கை கட்டளைகள் நிறுவனம் உள்ளிட்ட 6 அரச நிறுவனங்கள், நாமல் ராஜபக்சவின் கீழுள்ள டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

அதற்கமைவாக, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்,தேசிய விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆணைக்குழு மற்றும் அனைத்து தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் என்பவை டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்துடன், Sri Lanka Institute of Nanotechnology Pvt Ltd நிறுவனம், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் இணைந்த நிறுவனங்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை மற்றும் இணைந்த நிறுவனங்கள், இலங்கை கணினி திீர் பதிலளித்தல் ஒன்றியம், சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் மற்றும் அதன் நிர்வாக மற்றும் இணை நிறுவனங்கள், ஆள் பதிவுத் திணைக்களம் என்பவை நாமல் ராஜபக்சவின் புதிய இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் வெளியி டப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# அரசுக்குள் நெருக்கடியால் பங்காளிக் கட்சிகள் பிரிவு

## சு.க. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 7

தற்போதைய அரசுக்குள் பெரும் நெருக்கடிகள் உருவெடுத்துள்ளதால், அதன் பங்காளிக்கட்சிகள் பிரிந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவிக்கையில்,

அரசிலுள்ள பங்காளிக்கட்சிகள் தனித்து பேச்சுக்களை நடத்தி வருகின்றன. அதனூடாக அரசுக்குள் குழப்பங்கள் ஏற்பட்டிருப்பது தெளிவாகின்றது.

அதேவேளை எதிர்வரும் நாள்களில் இந்த நெருக்கடிமிக்க தருணங்களை எப்படிக்கையாள்வது என்பது பற்றி பேச்சு நடத்தப்பட வேண்டும். குறிப்பாக எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் இந்த நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையான நாட்டின் சொத்துக்களை விற்பனைசெய்யக்கூடாது என்கின்ற விடயத்தை தற்போதைய அரசு மீறிச் செயற்படுகின்றது. அதனைவிட சுற்றாடலுக்கும் பெரும் சவால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

பொருளாதாரம், விவசாயம் உட்பட பல துறைகளிலும் மக்கள் இன்று பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இவற்றைச் சிந்திக்காத தற்போதைய அரசு அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும் - என்றார். (எ-4)

# கோத்தாபயவினது அரசை அகற்ற ஒன்றிணையுங்கள்!

## சஜித் அறைகூவல்

கொழும்பு, ஜூன் 7

நாட்டின் மோசமான அரசை வெளியேற்ற சகல சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்புவிடுத்துள்ளார்.

அரசின் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த அரசு, நாட்டை கொரோனாப் பரவல் ஏற்படுகின்றதா, இல்லையா என்று ஆராயும் ஆய்வுகூடமாக மாற்றியுள்ளது. அரசின் தன்னிச்சையான, வினைத்திறனற்ற, குழப்பமான செயற்பாடுகளால் நாட்டின் அனைத்துத்துறைகளிலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு, தடுப்பூசி வழங்கல் மற்றும் தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் ஆகியவற்றில் அரசியல் இலாபம் பெற அரச தரப்பினர் ஆரம்பித்துள்ளனர். அறிஞர்களின் கூட்டணி என்று கூறிக்கொண்டு ஆட்சிப்பீடம் ஏறியவர்கள், மக்களின் சுவாசிக்கும் உரிமையைப் பறிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

பயணக் கட்டுப்பாடுகளில் மக்களை இரு விதமாக நடத்தும் நிலை உருவாகியுள்ளது. அரசியல் பின்னணி கொண்டவர்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படுகின்றன.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான சரியான திட்டங்கள் இல்லை. விவசாயிகள் உரம் இன்றி துன்பப்படுகின்றனர். மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் பாதிப்பும் காடழிப்பும் தீவிரமடைந்துள்ளன. மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதோடு, துறைசார் அமைச்சர் பொறுப்பின்றி இருக்கின்றார். நாட்டின் பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த அரசை வெளியேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுக்கவுள்ளோம். மக்கள் நலனைக் கவனத்தில் எடுக்கும் சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் - என்றுள்ளது. (ம-ஒ.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய உற்பத்திப் பொருள்களும் மக்களுடைய வீடுகளுக்கே விநியோகம்

**வவுனியா, ஜூன் 7**

**விவசாயிகளது உற்பத்திப் பொருள்களை நேரடியாகப் பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் சேதுகாவலர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
தற்போதைய நிலையில் மரக்கறிகளின் விலைகள் தொடர்பான விடயங்களை முன்னிலைப்படுத்தியுள்ளோம். அவற்றின் விலை தொடர்பான பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு புதிய ஒரு செயற்திட்டத்தை ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். அந்த வகையில் "விவசாயிகளிடம் இருந்து வீடு வரை" என்ற செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் மற்றும் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை இணைந்து இதனை முன்னெடுக்கவுள்ளன. அத்துடன் விற்பனை செய்யப்படும் பொருள்களை ஆகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்கான கட்டுப்பாட்டு விலையையும் நிர்ணயித்துள்ளோம்.

எனவே விற்பனை முகவர்களூடாக இந்தப் பொருள்களை மக்கள் பெற்றுக்கொள்ளலாம். இதேவேளை கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனைகள் இடம்பெறுவதைக் கண்காணிக்கும் பணியை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகதர்கள் மேற்கொள்வர்.
வெளிமாவட்டத்தில் இருந்து வந்து இங்கு வியாபாரம் மேற்கொள்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழித்தட அனுமதியானது, இங்குள்ள விவசாய உற்பத்திப் பொருள்களை வெளிமாவட்டத்துக்கு கொண்டுசெல்வதற்காகவே வழங்கப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்களின் வழித்தட அனுமதிகள் இரத்துச்செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரூடாக முன்னெடுக்கப்படும்.
இந்தவாரம், கத்தரிக்காய் ஒருகிலோ 120 ரூபாவுக்கு விவசாயிகளிடமிருந்து கொள்வனவுசெய்யப்பட்டு, 180 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். வெண்டிக்காய் கொள்விலை 60 - விற்பனைவிலை 90, கறிமிளகாய் கொள்விலை 120- விற்பனை விலை 180, பயிற்றை கொள்விலை 100- விற்பனை விலை 150, பாவற்காய் கொள்விலை 170- விற்பனை விலை 250, புடோல் கொள்விலை 100- விற்பனைவிலை 125, மூட்டை மிளகாய் கொள்விலை 150- விற்பனை விலை 230, பூசணி கொள் விலை 30 - விற்பனை விலை 45, மரவள்ளி கொள்விலை 40- விற்பனைவிலை 60 என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இதேவேளை விவசாயப் பொருள்களை வாகனத்தில் விற்பனை செய்பவர்கள் இவ் வாரத்துக்கான இந்த விலைப் பட்டியலை காட்சிப்படுத்த வேண்டும்- என்றார். (ப-110)

# சாளை, சூடை மீன்கள் ஒரு கிலோ 80 ரூபா

## முல்லையில் விற்பனை

முல்லைத்தீவு, ஜூன் 7
முல்லைத்தீவு மாவட்டத்தில், சாளை, சூடை ஆகிய மீன்கள் மிகவும் மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கிலோ 80 ரூபா தொடக்கம் 120ரூபா வரை இந்த மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.
குறித்த மீன்கள் கடந்த பத்து நாள்களுக்கு முன்னர் 250 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்ட நிலையிலேயே தற்போது இவ்வாறு மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஏனைய மீன்கள் 450 ரூபா தொடக்கம் 700 ரூபா வரை தற்போது விற்பனை செய்யப்படுகின்றன. பயணத் தடையால் மாவட்டத்துக்குள் மீன்களைக் கொண்டுசெல்வதில் உள்ள நெருக்கடி காணப்பட்டாலும், கிராமங்களுக்குள் இயன்றளவு மீன்களைக் கொண்டுசெல்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்ரிக் ஜோன்சன் தெரிவித்தார். (ப-13)



# இறைச்சிக்காக பசு மாடு அறுப்பு

## இருவர் நேற்று கைது

கிளிநொச்சி, ஜூன் 7
இறைச்சிக்காக பசு மாட்டை வெட்டினர் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் பகுதியில் நேற்று இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் அக்கராயன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ப-113)

# மட்பாண்ட உற்பத்தியாளர்களுக்கும் அரசு தீர்வைப் பெற்றுத்தரவேண்டும்

## பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 7
பயணக் கட்டுப்பாட்டுக் காலத்தில் சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் வரிசையில், மட்பாண்ட உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கையில்;
தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பயணத் தடை காரணமாக நாம் பரம்பரையாகச் செய்துவந்த மட்பாண்ட உற்பத்தியை மேற்கொள்ள முடியாதுள்ளோம். வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களில் அதிகமானவர்கள் எம்மிடமே மட்பாண்டப் பொருள்களைக் கொள்வனவுசெய்து செல்வர். தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடையாலும், ஆலயத் திருவிழாக்கள் மற்றும் கலை நிகழ்வுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாலும் எமது வாழ்வாதாரத்தை முன்னோக்கி கொண்டுசெல்வதில் மிகவும் சிரமப்படுகின்றோம்.
மட்பாண்டத் தொழிலுக்கான மூலப் பொருள்களை ஒட்டிசுட்டான் அல்லது கண்டாவளை பகுதிகளில் இருந்தே பெற்றுக்கொள்கின்றோம். அப்படிப் பல ரூபா பெறுமதியான பணத்தைச் செலவிட்டு உற்பத்திசெய்யப்பட்ட மட்பாண்டப் பொருள்கள் சந்தைப்படுத்த முடியாது தேங்கியுள்ளன.
இதனாலேயே நாம் வாழ்வாதாரத்தை இழந்துள்ளோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிறு கைத் தொழிலை ஊக்குவிக்கும் முகமாக எமக்கு ஏதேனும் ஒரு தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்.
எனவே நாங்கள் இந்தத் தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமாயின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமக்கு ஆதரவளிக்க வேண்டும்- என்றனர். (ப-113)







# கிருமிநாசினி, பசளைகளின் விலையைக் கட்டுப்படுத்தவும்

## ஜனாதிபதி, பிரதமருக்கு வினோ எம்.பி. கடிதம்

மன்னார், ஜூன் 7
2021ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கை மற்றும் உப உணவு செய்கைக்கான பசளை, கிருமி நாசினிகளின் தட்டுப்பாடுகளை நீக்கவும், விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோருக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் அவசர கடிதங்களை நேற்று அனுப்பியுள்ளார்.
குறித்த கடிதங்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,
நெற் பயிர்ச்செய்கையையும், உப உணவு தோட்டப் பயிர்ச்செய்கையையும் தமது ஜீவனோபாய தொழிலாக மேற்கொண்டுவரும் வன்னி மாவட்டத்தின் பெரும்பான்மையான மக்கள் காலநிலை மற்றும் இயற்கை இடர்களுக்கு ஒரு புறம் முகம் கொடுத்துக்கொண்டுவரும் நிலையில் கிருமிநாசினிகள் மற்றும் உரம் போன்ற விவசாய உள்ளீடுகள் குறித்த காலத்துக்கு கிடைக்கப்பெறாமையால் பல்வேறு சிரமங்களுக்குள் சிக்கியுள்ளனர்.
உரிய நேரத்திலும், காலத்திலும் விவசாய உள்ளீட்டுப் பொருள்கள் கிடைக்காமையால் விவசாயிகளின் தாங்கிக்கொள்ள முடியாத சுமைகள் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.
விவசாய உள்ளீடுகளின் தட்டுப்பாடுகள் ஒருபுறமிருக்க விலை அதிகரிப்பாலும் அல்லற்படுகின்றனர்.
இன்று ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான ஓர் அந்தர் உரம் 4 ஆயிரம் ரூபா தொடக்கம் 4 ஆயிரத்து 500 ரூபா வரை வெளிச்சந்தையில் விற்கப்படுகின்றது.
கிருமிநாசினிகள், மருந்துப் பொருள்களும் 35 தொடக்கம் 40 சதவீதம் வரையாக விலை அதிகரிப்பு செய்யப்பட்டு கடந்த ஒரு மாதமாக வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன.
சேதன, இரசாயன பசளைகளுக்கான இறக்குமதித் தடை நீக்கப்பட்ட பிற்பாடும் இதே நிலைமை தொடர்வதை காணக்கூடியதாக இருப்பது கவலை தருகின்றது. பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகள் பலன் தரக்கூடிய அறுவடையை செய்ய முடியுமா? என அச்சம் கொண்டுள்ளனர். இந்த நிலையில் மொத்த, சில்லறை வியாபாரிகள் மற்றும் இடைத்தரகர்கள் அதிக இலாபமீட்டுகின்றனர். விவசாயிகள் பாதிக்கப்படுவதையும் ஒரு பொறுப்பு வாய்ந்த அரசு பார்த்துக்கொண்டிருக்க முடியாது.
அரசின் மானிய அடிப்படையிலான உரங்கள்கூட தற்போதைய பயணத் தடை உட்பட்ட காரணங்களால் சீராக கிடைக்கப் பெறுவதில்லை. வன்னி மாவட்டத்தில் ஐம்பது சதவீத மானிய உரங்கள் கூட கமநலத் திணைக்களத்தால் இதுவரை வழங்கப்படவில்லை என விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே இவை சம்பந்தமாக உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விலை உயர்வுக்கும் காரணங்களை கண்டறிந்து தீர்வுகாணுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். - என்றுள்ளது. (கு-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர் விவேக்கின் நினைவாக த.தே.ப. இயக்கமும் மரநடுகை

## இயக்கத்தின் தலைவரால் திட்டம் ஆரம்பம்



**யாழ்ப்பாணம், ஜூன் 7**

**உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5ஆம் திகதி, நடிகர் விவேக்கின் நினைவாக 'நடிகர் விவேக்கின் பணியில் எமது பங்கு, நாமும் நடுவோம் ஒரு மரம்' என்ற மரநடுகைத் திட்டத்தை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆரம்பித்துள்ளது.**

கொரோனா காரணமாக நாடு முடக்கப்பட்டிருப்பதைக் கருத்திற் கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தனது சுற்றுச்சூழல் தின நிகழ்ச்சியை இம்முறை இணையத்தின் ஊடாக ஏற்பாடு செய்திருந்தது.

'இந்த ஆண்டுக்குரிய சூழல் தினத்தில் இயற்கைக்குத் திரும்புதல்' என்ற கருப்பொருளுக்கு அமைவாக நடைபெற்ற இணையவழி உரையரங்கின் நிறைவில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சம்பிரதாயபூர்வமாக மரக்கன்றுகளை வழங்கி, மரக்கன்று ஒன்றை நடுகைசெய்து இத் திட்டத்தை ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து இணையத்தில் 'சூம்' செயலியின் ஊடாக உரையரங்கில் கலந்துகொண்டிருந்த நூற்றுக்கும் அதிக மானவர்கள் தத்தமது வீடுகளில் மரநடுகையில் ஈடுபட்டனர். (ப)





# கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா

சூரிச், ஜூன் 7

ஐரோப்பாவில் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கும் சுவிற்சர்லாந்து செங்காலன் சென்மார்க்றெத்தன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா பக்திபூர்வமாகவும் சிறப்பாகவும் அண்மையில் நடைபெற்றது.

சுவிற்சர்லாந்தில் செயற்பாட்டில் உள்ள சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கடந்த 22ஆம் திகதி இந்தத் திருவிழா ஆரம்பமாகி இடம்பெற்றது. 9ஆம் திருவிழாவான தேர்த்திருவிழா கடந்த 29ஆம் திகதி காலை இடம்பெற்றது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் வெளிவீதியில் அமைக்கப்பட்டுள்ள தீர்த்தக் கேணியில் கதிர்வேலர் தீர்த்தமாடி பக்தர்களுக்குத் தீர்த்தம் வழங்கினார்.

ஆலய மகோற்சவ நிகழ்வுகளை சிவத்தமிழ்க் காவலர் ஆறுமுகம் செந்தில்நாதன் தூய தமிழில் எடுத்துரைத்தார்.

ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு ஈழத்து கவிஞர் இன்பம் அருளையா வரிகளில் சானு இசையில் 'கதிர்வேலாயுதா' என்றும் பாடலும், சீரவை ஆதீன மாணவிகள் கமலினி கணேசன், ஹேமப்பிரியா ரவீந்திரன் பாடிய 'வேலன் வாராண்டி கதிர்வேலன் தேரில் வாராண்டி' பாடலும் வெளியிட்டு வைக்கப்பட்டன. (ம)



கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொருண்மியம் நலிவடைந்த சில குடும்பங்களுக்கு மதகுரு ஒருவரால் நேற்று உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ப-113)

# மாமூலை, கயட்டை பகுதிகளில் 60 குடும்பங்களுக்கு உலர் உணவு

முல்லைத்தீவு, ஜூன் 7

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு கிராமத்தில் வசிக்கும் 25 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. உதவும் கரங்கள் அமைப்பால் இவ் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கொவிட் -19 முடக்கம் காரணமாக உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ள குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு இவ் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன் உணவுப் பொருள்களை வழங்கினார்.

இதேவேளை முள்ளியவளை மாமூலை கயட்டைப் பகுதியில் வசிக்கும் 35 குடும்பங்களுக்கான உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. (ப-13)



# முல்லையடி உள்ளக வீதியின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளியின் முல்லையடி உள்ளக வீதியின் சீரமைப்புப் பணி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் போக்குவரத்துச்செய்ய முடியாது மணல் வீதியாகக் காணப்பட்ட இவ் வீதியை சீரமைத்துத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம் மக்கள் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில் குறித்த வீதியைச் சீரமைத்து வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுத்தார். இந்த நிலையில், சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வீதியின் சீரமைப்புப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சீரமைப்புப் பணிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உப தவிசாளர் கஜன், உறுப்பினர்கள் வீரவாகுதேவர், ரமேஷ், அமைப்பாளர் நிலாக்கரன் மற்றும் செல்வராசா ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (ப-13)



# காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கும் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்

## முல்லை. பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுர்த்திக் கொடுப்பனவுக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்கள் ஆகியோருக்கு அரசின் இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் சற்குணநாதன் சுயன்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போது சமுர்த்திக்காகக் காத்திருப்போர், முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோரின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே அரசின் இடர்காலக் கொடுப்பனவான ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவை அவர்களுக்கும் விரைந்து வழங்குவதற்கு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கொவிட் 19 முடக்கம் காரணமாக மேற்படி பயனாளிகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வாழ்வாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தப் பயனாளிகள் தமது கொடுப்பனவுகளுக்காக சமுர்த்தி உத்தியோகத்தர்களிடமும், கிராம அலுவலர்களிடமும் தொடர்ந்து தொடர்புகொண்டு வருகின்றனர். எனவே அவர்களுடைய நிலையைக் கருத்திற்கொண்டு அந்தக் கொடுப்பனவுகள் அவர்களுக்கு விரைந்து வழங்கப்படவேண்டும் என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எண்ணெய் கசிவை எதிர்கொள்ள நிபுணர் குழு

கொழும்பு, ஜூன் 7
எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் எண்ணெய் கசிவு ஏற்பட்டால், அதனை எதிர்கொள்வதற்கு சர்வதேச நிபுணர் குழுவொன்று தயாராகவுள்ளது.

ஓ.எஸ்.ஆர்.எல். என்ற நிறுவனம் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து எண்ணெய் கழிவு ஏற்பட்டால், அதனை எதிர்கொள்வதற்குத் தயாராக உள்ளது.

ஐ.டி.ஓ.பி.எவ் என்ற நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதற்காக ஓ.எஸ்.ஆர்.எல் நிறுவனம் தயாராகவுள்ளது.

அதேவேளை எக்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து இரசாயனங்கள் பிளாஸ்டிக் உட்பட ஏனைய பொருள்கள் அழிந்து போனமை தொடர்பில் ஐ.டி.ஓ.பி.எவ் நிறுவனம் ஆலோசனை வழங்கி வருகின்றது. (எ-4)

# கப்பல் தீப்பற்றியதால் இலங்கைக்கு ஆபத்து

## உதவுமாறு உலக நாடுகளிடம் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கோரிக்கை


**கொழும்பு, ஜூன் 7**

**எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கைக் கடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கணிப்பதற்கும், கண்காணிப்பதற்கும் உலக நாடுகள் உதவ வேண்டும் என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,
கப்பல் தீப்பற்றியதால், கடல்சார் பேரழிவை இலங்கை எதிர்கொண்டுள்ளது. எனவே உலகில் உள்ள இலங்கையின் சகாக்கள் உடனடி உதவிகளை வழங்க வேண்டும்.
விசேட உபகரணங்கள் முதல் (தனிப்பட்ட பாதுகாப்புச் சாதனங்கள், ஏற்படக்கூடிய எண்ணெய்க் கசிவைக் கையாள்வதற்கான சாதனங்கள் மற்றும் சுத்திரிகரிப்பதற்கான பொருள்கள்) பாதிப்புக்களைக் கண்காணிப்பதற்கும், கரையோர மக்களுக்கும், கடல்வாழ் உயிரினங்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் கணிப்பிடுவதற்கும் உலக நாடுகள் உடனடி உதவிகளை வழங்க வேண்டும்- என்றுள்ளது. (எ-4)

# 20 பேரிடம் வாக்குமூலம்

கொழும்பு, ஜூன் 7
இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் இதுவரை 20 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
அதேவேளை கப்பலின் குரல் தரவு பதிவு சாதனம், குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்துள்ளது. குறித்த சரக்குக் கப்பல் தொடர்பான நிறுவனம் ஊடாக இந்த சாதனம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது.
கப்பல் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு இந்தக் குரல் பதிவு தரவுகள் அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)



# தீப்பற்றிய கப்பலின் தகவல் பெட்டி மீட்பு

கொழும்பு, ஜூன் 7
இலங்கைக் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் தகவல் பெட்டி மீட்கப்பட்டுள்ளது.
கடற்படையினரின் விசேட தேடுதலில் கண்டுபிடிக்கப்பட்ட தகவல் பெட்டி, மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடமுள்ள தகவல் பெட்டி, நீதிமன்றத்தின் அனுமதியுடன் இரண்டு நாள்களில் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதேவேளை, கப்பலிலுள்ள எரிபொருள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபை, கப்பல் மீட்பு நிறுவனத்தின் கப்டனுக்கு அறிவுறுத்தியுள்ளது.
மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலால் கடல், சுற்றுச்சூழல் மற்றும் கரை உள்ளிட்ட பகுதிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. அதேவேளை கப்பலிலிருந்து கரையொதுங்கிய சிதைவுகளுடன்கூடிய சுமார் 40 கொள்கலன்கள் மேலதிக சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-4)

# கப்பலில் பரவிய தீ இன்னமும் மர்மம்?

## நிறுவன அதிகாரி தகவல்

கொழும்பு, ஜூன் 7
எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் எவ்வாறு தீ பரவியது என்பது இன்னமும் மர்மமாகவுள்ளது. தீ மூண்டமைக்கான காரணம் என்னவென்பதை மதிப்பிடுவது கடினமாகவுள்ளது. ஒரு கொள்கலனில் ஏற்பட்ட கசிவால் தீ பற்றியிருக்கலாம். எனினும் அதனை 100 வீதம் உறுதியாக தெரிவிக்க முடியவில்லை.



இவ்வாறு எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை இயக்கிய எக்ஸ்பிரஸ் பீடர்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்மல் யாட்ஸ்கவிட்ஸ் தெரிவித்துள்ளார்.
வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
குறித்த கொள்கலன்கள் கடந்த மாதம் 10ஆம் திகதி டுபாயின் ஜெபல் அலி துறைமுகத்தில் ஏற்றப்பட்டன. கட்டாரின் ஹமாட் துறைமுகத்துக்கு அருகில் கப்பலில் கசிவு ஏற்பட்டமை தெரியவந்தது. குறிப்பிட்ட கொள்கலன்களை இறக்க அனுமதி கேட்டோம். ஆனால் தங்களிடம் அதற்காக ஆளணி இல்லை என்ற காரணத்தைக் கூறி அவர்கள் அனுமதி வழங்கவில்லை.
அதன் பின்னர் கப்பல் இந்தியாவில் உள்ள ஹசிரா துறைமுகத்துக்குச் சென்றது. அங்கும் நாங்கள் குறிப்பிட்ட கொள்கலன்களை இறக்க அனுமதி கேட்டோம். அங்கும் இதே காரணத்தைத் தெரிவித்து நிராகரித்து விட்டனர்.
அதன் பின்னர் கடந்த 19 ஆம் திகதி எக்பிரஸ் பேர்ள் இலங்கைக்கு வந்தது. அடுத்த நாள் காலை கப்பலில் புகைவெளியாவது கண்டுபிடிக்கப்பட்டது. அதுவரையில் ஒரு கொள்கலனில் இருந்து மாத்திரம் கசிவு காணப்பட்டது. அதனால் தீ பரவியமைக்கான காரணத்தைக் கண்டறிய முடியவில்லை- என்றார். (எ-4)

# பேர்ள் கப்பல் விவகாரம்: தகவல்கள் பல மறைப்பு

## ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 7
எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பாக பல தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றபோதும், அரசு அவற்றை மூடி மறைக்க முயல்கின்றது.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் குற்றஞ்சாட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்தக் கப்பல் தொடர்பாக வெளியிடப்பட்ட தகவல்களில், மூன்று நாடுகள் தங்கள் கடற்பகுதிக்குள் குறித்த கப்பலை அனுமதிக்கவில்லை என்பது தெரியவந்தது. இந்தத் தகவலை பேராசிரியர் விஜயகுணவர்த்தன வெளியிட்டிருந்தார். இந்தச் செய்தி வெளியானதும் பேராசிரியர் பொலிஸ் விசாரணைக்காக அழைக்கப்பட்டார்.
அதேவேளை தற்போதைய கொரோனா நெருக்கடி தொடர்பில் கருத்துக்களைத் தெரிவிப்பவர்களை மௌனமாக்குவதன் மூலமே அரசு பிரச்சினைகளைக் கையாள்கின்றது.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தனது அமைச்சின் பணியாளர்களை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்க வேண்டாம் என்று கோரி சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.
இவ்வாறான நெருக்கடிகளால் பல தகவல்கள் மறைக்கப்படுகின்றன. மறைப்பதற்கு எதுவுமில்லை என்றால் ஏன் ஊடகங்களுடன் பேசத் தயாங்குகின்றீர்கள்- என்றார். (எ-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 06 . 1940





இறப்பு
04 . 06 . 2021



## திருமதி மேரிரோஸ் அமிர்தநாதர்

யாழ். நாவாந்துறையை பிறப்பிடமாகவும் France Versailles ஐ வதிவிடமாகவும் கொண்ட மேரிரோஸ் அமிர்தநாதர் அவர்கள் கடந்த (04.06.2021) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இசிதோர் மரியம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை எலிசபேத் தம்பதியரின் அன்பு மருமகளும், சூசைப்பிள்ளை அமிர்தநாதர் அவர்களின் அன்பு மனைவியும், மேரி அமிர்தா (Norway), Sr.அமிர்திரனி (இலங்கை), கொண்ஸ்ரன்ரையின் (Norway), மேரிபுஸ்பா (Norway), மேரி அமிர்தரசி (Norway), கொண்சலாமேரி (France), றெக்ணோ (Norway) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இம்மானுவேல் (Norway), மேரி அனஸ்ரீனா (Norway), ஆரோக்கியசீலன் (Norway), அமல்ராஜ் (Norway), ஜெகநாதன் (France) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான செசீலியம்மா, மரியதாஸ், மேரிராயேஸ்வரி மற்றும் லூர்த்தம்மா, மரியபுஸ்பம், அன்ரனியம்மா, மொன்மொலின் யெராட் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற வர்களான கிறகரி, பாலசிங்கம், யேசுதாசன், விஜயகுமார் மற்றும் அருமைத்துரை, மலர், லூர்துநாயகி ஆகியோரின் மைத்துனியும், கெசியா, எபித்தா, பிரியங்கா, பிரியாந், காவியா, ஓவியா, எலிசபேத், பவுலீனா, அனுசாந், எல்சிமரி, எமிலின், எமண்டா, எரிக், சாரங்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் உடல் 07.06.2021 (திங்கள்), 09.06.2021 (புதன்) 15.00-17.00 மணி வரையும், 11.06.2021 (வெள்ளி) 9.00 - 11.0 மணிவரையும் 15 Rue deo Porte de buc versailles இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, 11.06.2021 (வெள்ளிக்கிழமை) 12.00 - 15.00 மணிக்கு Sainte Bernadette, 7 Rue Saint-Nicolas, 78000 Versailles இல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு 15.00 மணிக்கு Cimetiere de Montreuil 81 Rue de la Bonne Aventure, 78011 Versailles இல் நல்லடக்கம் செய்யப்படும்.

**நேரடி ஒளிபரப்பு : (11.06.2021) மு.ப. 9.00 - பி.ப 12.00)**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**அமிர்தநாதர் - கணவர்**
**0033605543471**
**கொண்ஸ்ரன்ரையின் - மகன்**
**0047 91767732**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில்

## மரகத நாணயம்- 2



தமிழில் ஆதி, நிக்கி கல்ராணி நடிப்பில் கடந்த 2017ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் 'மரகத நாணயம்'. அறிமுக இயக்குநர் சரவன் இயக்கி இருந்த இந்தத் திரைப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சனரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது.

பின்னர் எந்த திரைப்படத்தையும் இயக்காமல் இருந்த இயக்குநர் சரவன், அடுத்ததாக அதர்வா நடிக்கும் திரைப்படத்தை இயக்க உள்ளாராம்.

இந்நிலையில், அதர்வா திரைப்படத்துக்கு பின் மரகத நாணயம் திரைப்படத்தின் 2ஆம் பாகம் விரைவில் உருவாக வாய்ப்புள்ளது என இயக்குநர் சரவன் தெரிவித்துள்ளார்.






# ட்ரம்ப்பின் 'கணக்கை' முடித்த பேஸ்புக்

வடிவேலு ஒரு படத்தில் சொல்லுவாரே, "பேச்சாடா பேசுனே.. கொஞ்சம் நஞ்சம் பேச்சா பேசுனே..ன்னு" அந்த மாதிரி, தன்னுடைய அரசியலில் ஓவராகவே பேசிவிட்டார் டிரம்ப்.. இப்போது அவரது ஃபேஸ்புக் கணக்கு, 2 வருடத்துக்கு முடக்கி வைக்கப்பட்டுவிட்டது.

கடந்த ஜனவரி மாதம் அதிபர் தேர்தல் நடைபெற்றது... எப்படியும் வெற்றி பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கையிலேயே அசால்ட்டாக இருந்த ட்ரம்ப், கடைசியில் தோற்றுவிட்டார்.. ஜோ பைடன் வெற்றி பெற்றுவிட்டார்.. ஆனால், தான் தோல்வி அடைந்ததை டிரம்ப்பால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை... அதை ஜீரணிக்க முடியாமல் பதவியேற்க போகும் அரசை கடுமையாக தாக்கிப் பேசினார்..

கோர்ட் வரை போய், போராடி தனக்காகவே வாதாடி தோற்றும் போனார்.. தன்னுடைய ஆதரவாளர்களிடம் வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார்...

இந்நிலையில், டிரம்பின் பேஸ்புக் பக்க கணக்கு 2 வருஷத்துக்கு முடக்கப்படுகிறது என பேஸ்புக் நிறுவனம் அதிகாரபூர்வமாக அதிகரித்துள்ளது. அதன்படி டொனால்டு டிரம்பின் ஃபேஸ்புக் பக்கம் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை முடக்கப்பட்டுள்ளது. வரப்போகும் இந்த 2 வருஷத்துக்கு பிறகு பொதுமக்கள் பாதுகாப்புக்கு எந்த பிரச்சினைகளும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பின்னரே, மீண்டும் ஃடிரம்பின் பேஸ்புக் கணக்கை அனுமதிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்று பேஸ்புக் நிறுவனம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. ஆனால் ட்ரம்ப் "தனக்கு தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு கிடைத்த அவமரியாதை இது" என்று சொல்லி வருகிறார். டிரம்ப்பாவது, சும்மா இருக்கிறதாவது அதுவும் 2 வருஷத்துக்கு எதையாவது செய்வார்.. பொறுத்திருந்து பார்ப்போம்..!

twitter.com/@Kozhiyaar

காய்கறி அரிந்துக் கொண்டிருக்கும் பொழுது மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவது, உயிர் நலத்திற்கு கேடானது!!

twitter.com/@Suyanalavaathi

கோவத்தை உப்பு போல பயன்படுத்தனும் !!
குறைந்தால் மரியாதை போயிரும் !!
கூடினால் மதிப்பு போயிரும் !!

twitter.com/@manipmp


எல்லா வேலையும் முடிந்த பிறகு, தைரியமாக சொல்லப்படும் வார்த்தையே எனி ஹெல்ப்..!!

twitter.com/@iamsathishvarun

எதை பெரும் இழப்பாக நினைப்பீர்கள்?
வாழ்ந்து கொண்டு இருக்கும் வாழ்க்கையை தான்..!!!




# ஜடேஜாவை ஈர்த்த 'வானத்தை போல'



இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கு பிடித்த தமிழ் பாடல் குறித்து தனது யூடியூபில் பேசியிருக்கிறார் ரவிச்சந்திர அஸ்வின்.

"நான் எப்போதும் ஜிம்முக்கு போகும் போது தமிழ் பாடல்கள் தான் போடுவேன். அப்போது ஜடேஜா என்னிடம், 'நான் ஒரு தமிழ் பாடலை ரொம்ப லைக் பண்றேன்' என்றார். அது என்ன பாடல் என்று கேட்டா, "எங்கள் வீட்டில் எல்லா நாளும் கார்த்திகை" என்று வானத்தைப் போல படத்தில் உள்ள விஜயகாந்த் பாடலை கூறினார். அதற்குப்பிறகு, அந்த படம் பற்றி எல்லா விஷயத்தையும் என்னிடம் கேட்டு அவர் தெரிஞ்சுகொண்டார்" என்று கூறியிருக்கிறார்.



# இன்றைய நாள்

**மேடம்:** திருமணம் தள்ளிப்போனவர்களுக்கு நேரம் கூடிவரும். உங்களின் புத்திசாலித்தனம் பணியிடத்தில் பாராட்டுப் பெற்றுத் தரும். சமீபத்தில் ஏற்பட்டிருந்த வீண் பிரச்சினைகள் தீரும்.

**இடபம்:** மறைந்துள்ள திறமைகள் வெளிப்பட்டு பாராட்டை பெற்றுத் தரும். வயிறு சம்மந்தப்பட்ட பிரச்னைகள் தீர்ந்து நிம்மதி வரும். குழந்தைகளின் நடவடிக்கையில் நல்ல மாற்றம் வரும்..

**மிதுனம்:** உணவுவிஷயத்தில்கவனமாக இருக்க வேண்டும். தொழில் மூலம் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். வெளியூர் தொடர்புகள் வரும். பொறுமை தேவை.

**கடகம்:** தற்காலிக பணியில் உள்ளோருக்கு பணவரவு சுமாராக இருக்கும் மனக்கவலை நீங்கும். இன்று வரும் செய்திகள் நிம்மதி தரும். மூத்தவர் துணையுடன் நல்ல செயல்களைச் செய்வீர்கள்.

**சிம்மம்:** பாராட்டுப் பெறுவீர்கள். வீண் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். யாருக்காகவும் யாரிடமும் பரிந்துரைக்க வேண்டாம். பொறுமை தேவை. கடன் வாங்காதீர்கள்.

**கன்னி:** அதிகாரியின் கட்டளையை ஏற்று நடப்பது நல்லது. பெரிய மனிதர்களின் நட்பைத் தவறாகப் பயன்படுத்த வேண்டாம். புதிய இடத்துக்கு மாறுவது பற்றி யோசியுங்கள்.

**துலாம்:** பணத்தைச் சேமிப்பதில் சிறு சிறு சிரமங்கள் ஏற்படக்கூடும். தியாகம் செய்து உற்றவர்களுக்கு உதவிகள் செய்வீர்கள். வீடு வாங்குவதில் இருந்த சிக்கல்கள் அனைத்தும் தீரும்.

**விருச்சிகம்:** பொதுவாக யாரிடமும் வளைந்து கொடுத்து போவது நல்லது. உங்களால் பயனடைந்த ஒரு நண்பர் நன்மை செய்வார். இன்று சாதனை நாளாக அமையும்.

**தனுசு:** பிள்ளைகளின் தலையீட்டால் குடும்பத்தில் நிலவிய பிரச்சினை தீரும். மகிழ்ச்சியும் நற்செய்தியும் உண்டு. எதிரிகளைச் சமாளிப்பீர்கள். சுபநிகழ்ச்சிகள் நிகழும்.

**மகரம்:** உடல்நலப் பிரச்சினைக்கு மருத்துவரிடம் செல்வது நல்லது. வயிற்று உபாதைகள் ஏற்பட்டு உடனே சரியாகும். பிள்ளைகள், வாழ்க்கைத் துணைவரால் நலம் உண்டாகும்.

**கும்பம்:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். பணியாளர்கள் இன்று எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

**மீனம்:** வருமானம் திருப்தி தராது. உல்லாசங்களில் ஈடுபடுவீர்கள். நண்பர்களும், உறவினர்களும் உதவி செய்வார்கள். புகழ் சேரும். உழைப்புக்கேற்ற ஊதியமும் பாராட்டும் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட ரீதியாகவே கொவிட் தடுப்பூசிகள்!

## வினோ எம்.பியின் குற்றச்சாட்டுக்கு பிரதமரின் இணைப்பாளர் பதில்

கொழும்பு, ஜுன் 7
வடக்கு மாகாணத்துக்கு என்று ஒதுக்கப்பட்ட 50 ஆயிரம் தடுப்பூசிகள் யாழ்ப்பாணத்துக்குள் மட்டுமே பகிர்ந்தளிக்கப்பட்டு வடக்கின் ஏனைய மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டமை ஏன்? என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் குற்றச்சாட்டை முன்வைத்திருந்த நிலையில், தடுப்பூசிகள் மாகாண ரீதியாக வழங்கப்படவில்லை என்று பிரதமரின் இணைப்பாளர் பதில் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் பிரதமரின் இணைப்பாளர் தனது டுவிற்றர் பதிவில், கொரோனாத் தடுப்பூசித் திட்டம் மாகாண ரீதியாக முன்னெடுக்கப்படும் திட்டமல்ல. அது மாவட்ட ரீதியாகத்தான் முன்னெடுக்கப்படுகின்றது.

பாதிப்புக்கள் அதிகமுள்ள மாவட்டங்கள் இனங்காணப்பட்டு இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. கொரோனாவால் ஆபத்து மிகுந்த மாவட்டங்களின் பட்டியலில் யாழ்ப்பாணம் 9ஆவது இடத்தில் உள்ளது.

இதன் காரணமாகத்தான் அந்த மாவட்டத்துக்கு 50 ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. அது வடமாகாணத்துக்கு என குறித்தொதுக்கப்பட்ட தடுப்பூசிகள் அல்ல - என்றார். (ம)

### ஆடைத்...

ஏற்க வேண்டும் என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெருமளவு கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுவதற்கு புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை முக்கிய காரணமாக இருந்தது. இதனால் கடந்த மாதம் தொழிற்சாலை மூடப்பட்டது. கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வராத நிலையில், கொத்தணியின் வலைப்பின்னல் முழுவதுமாக உடைக்கப்படாத நிலையில் பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் தொழிற்சாலை இன்று திறக்கப்படுகின்றது. தொழிற்சாலையை மீண்டும் திறக்கின்றமைக்கு ரவிகரன் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும், வெளிமாவட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு கடந்தமாதம் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவர்களில் 6 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து கடந்த மாதம் ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டு அங்கு பணியாற்றியவர்களுக்குப் பி.சி.ஆர். சோதனை மேற்கொண்டதில் மிகமிக அதிகமானவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இது மிகுந்த ஆச்சரியத்தையும் அச்சத்தையும் தருகின்றது.

இது தொடர்பில் நான் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் மற்றும், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் உமாசங்கர் ஆகியோருடன் உரையாடினேன். அவர்கள் உரிய வகையில் சுகாதார விதிமுறைகள் பேணப்பட்டு, பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டே குறித்த ஆடைத் தொழிற்சாலை திறக்கப்படுகின்றது - என்றனர்.

ஆயினும் அனேகமானவர்கள் தொழிற்சாலையைத் திறப்பதை பொருத்தமற்றதாகவே கருதுகின்றனர்.

எனது கருத்தும் அதுதான். எனவே தொழிற்சாலை மீளத்திறப்பட்ட பின்னர் ஏற்படும் தொற்றுக்கள் மற்றும் ஆபத்துக்களுக்கு உரிய அதிகாரிகள் பொறுப்புச் சொல்லவேண்டும் - என்றார். (ம-246)

### அரசடியில்...

திகதி அந்தப் பகுதி முடக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் 150 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் 55 பேருக்கு தொற்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அரசடி பகுதியில் உள்ள அனைவரிடமும் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (மஓ.5)

### வடக்கில்...

அதிகரித்துள்ளது. சராசரியாக ஆயிரத்து நூறு பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 120 பேர் வரையில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில் நேற்றைய தினம் 671 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 147 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் சோதனை முன்னெடுக்கப்படவில்லை. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவும், நேற்றுப் பகலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**யாழ்ப்பாணம்** - யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 71 பேருக்கும், அளவெட்டி பிரதேச மருத்துவமனையில் 9 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 7 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 5 பேருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் 2 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலும், மானிப்பாய் பிரதேச மருத்துவமனையிலும் தலா ஒவ்வொருவருக்கும் என 96 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா** - வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 30 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வவுனியாவில் முடக்கப்பட்ட சகாயமாதபுரத்தைச் சேர்ந்தவர்கள் 22 பேர்)

**கிளிநொச்சி** - கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், முழங்காவில் கடற்படை முகாமில் 9 பேருக்கும் என 18 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

ஒட்டுசுட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ.5)

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 09 . 1942
மறைவு 01 . 06 . 2021

## திருமதி நல்லையா பவளராணி

கந்தரோடையை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லையா பவளராணி கடந்த (01.06.2021) செவ்வாய்க்கிழமை லண்டனில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- சீவநாயகம் தம்பதியரின் அன்பு மகளும், உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நல்லத்தம்பி குஞ்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நல்லை (ஓய்வுபெற்ற லிகிதர், யாழ். செயலகம்) அவர்களின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மகாதேவா, சிவன்செயல், விக்கினராஜ் மற்றும் லோகேஸ்வரி, லோகேஸ்வரன், தவமலர், வைத்தீஸ்வரன், மகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, அன்னம்மா, கந்தசாமி, நல்லம்மா, ஆகியோரின் அன்பு மைத்துனியும், தயாளபதி (இந்தியா/U.K), தயானந்தன் (U.K), தயாளினி (U.K), தயாநிதி (U.K), தயாபரன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருவருள்செல்வி, நிர்மலா, இராகுநாதன், முருகதாஸ், சிவதர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்ஸினி, திவாகர், மேனுகா, கௌசிகா, சிற்சபேசன், ஜிசாந்தன், லக்சயன், ஷோவேந்தன், அனுசன், குணாளன், ஷருதி, சன்ஜேஷ், சன்ஜிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2021) செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**பிள்ளைகள்:**
**தயாளபதி - 00919151540807**
**தயாநந்தன் - 00447923439722**
**தயாபரன் - 00447534126660**
**இராகுநாதன் - 00447852677304** } மருமக்கள்
**முருகதாஸ் - 00447435264614** }
**மகேந்திரராசா (சிறி) - 00447961336831** } சகோதரர்கள்
**லோகேஸ்வரன் - 0776125499** }
**வைத்தீஸ்வரன் - 0774647264** }
**ஜிசாந்தன் - 00447402578518 - பேரன்**

# நெஞ்சம் கனத்த ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில் 20 . 10 . 1950
ஈசன் அடியில் 19 . 05 . 2016

## அமரர் திருமதி நாகரத்தினம் கணேஸ்வரி (தேவி)

**திதி:திரியோதசி (07.06.2021)**



உதிரம் விட்டு என் உயிர் கொடுத்த அன்னையே!
உறங்காமல் எமக்கு உணவு கொடுத்த எம் தாயே!
எங்கள் உணர்வில் கலந்து
எங்கள் ஊன்றுகோலாய் இருப்பவளே!
நீ இல்லை என்றால் நாங்களும் இல்லை. - ஆனால்
நீ இல்லா உலகில் மட்டும் எங்களை
தனியாக தவிக்க விட்டு சென்றாயே! "அம்மா"
தாய் எனும் தீபம் சுடர் எரிவதால் தான் இவ் உலகில்
பாசம் எனும் ஒளி மின்னுகிறது.
நீ எங்கள் தெய்வமல்லவா அம்மா
நாங்கள் இந்த உலகில் வாழும் வரையும்.
நீங்கள் எங்கள் எல்லோரையும் விட்டு பிரிந்து
ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்டன தாயே!
இன்றும் நாங்கள் உயிரற்ற நடைப்பிணமாக
வாழ்கின்றோம் அம்மா!
ஐந்து ஆண்டுகள் என்ன ஐந்நூறு ஆண்டுகளானாலும்
என்றும் மறவோம் எம் தாயே!

உன் இழப்பால் நித்தமும் வாடும்
உன் பாசமிகு கணவர்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள் (ஜேர்மனி)

தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

அவர் மேலும் தெரிவிக்கையில், முதலாம்கட்ட கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையின்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மக்கள் ஆர்வத்துடன் சென்று தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டனர். இரண்டாம் கட்டத் தடுப்பூசிகளை எதிர்வரும் 10ஆம் திகதியளவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரை சுமார் 3 ஆயிரத்து 600 பேர் யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். 48 இறப்புக்கள் பதிவாகியுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 965 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 936நபர்கள்சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு நேற்றுவரை (நேற்று முன்தினம்) சுமார் 59 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக சமுர்த்தி, மாற்றுத்திறனாளி, வயது முதிர்ந்தவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது. தெரிவுசெய்யப்பட்ட ஏனையவர்களுக்கு நிதி கிடைத்ததும் வழங்கப்படும் - என்றார். (ம-20)

## பயணக்....

நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர முடியும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

புத்தாண்டுக் கொத்தணி ஒரு லட்சத்தை தாண்டிவிட்டது. இந்த எண்ணிக்கை ஒன்றரை மாதங்களில் எட்டப்பட்டுள்ளது. தொற்றாளர் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரிப்பைக் காண்பிக்கின்றது.

தொற்றாளர் எண்ணிக்கையையும், உயிரிழப்புக்களின் எண்ணிக்கையையும் சடுதியாகக் குறைப்பதற்கே நாட்டில் பயணக்கட்டுப்பாடுவிதிக்கப்படுகின்றது. ஆனால், நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டால் நாங்கள் எதிர்பார்த்த பலனை இன்னமும் அடையவில்லை. தொற்றாளர்களின் எண்ணிக்கையிலோ, உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையிலோ சரிவைக் காணவில்லை.

பயணக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தில் நகரப்புறங்களில் 40 தொடக்கம் 50 சதவீதமான வாகன நடமாட்டங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. பொதுமக்களின் நடமாட்டமும் காணப்படுகின்றது. பயணக் கட்டுப்பாட்டுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு திருப்திகரமானதாக அமையவில்லை. எதிர்வரும் நாள்களும் ஆபத்தானவை. தொற்றாளர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இந்த பயணக் கட்டுப்பாட்டை எப்போது? எப்படி? தளர்த்துவது என்பது தொடர்பான கேள்விகள் சகல தரப்பினரிடையேயும் எழுந்துள்ளன.

தொற்றாளர்களின் எண்ணிக்கையையும், உயிரிழப்புக்களையும் குறைக்க வேண்டும். அதேவேளை நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கக் கூடாது. எனவே தடுப்பூசி வழங்கலை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். தடுப்பூசி வழங்கலுக்கான வழிகாட்டி ஒன்றை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தயாரித்து ஜனாதிபதியிடம் கடந்த வியாழக்கிழமை வழங்கியுள்ளது. அதற்கமைவாக முன்னுரிமைப் பட்டியல் ஒன்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோர் ஆகியோருக்கு வழங்குவதற்கு 4.5 மில்லியன் தடுப்பூசிகள் தேவை.

இந்த முன்னுரிமைப் பட்டியலில் உள்ளோருக்கு தடுப்பூசி வழங்குவதன் ஊடாக 90 சதவீதமான உயிரிழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். அதே போன்று கணிசமான அளவு நோய்ப் பரவலையும் தடுத்துக் கொள்ளலாம். இதன் ஊடாக நாட்டை மீண்டும் படிப்படியாக வழமைக்கு கொண்டுவரலாம்.

மேலும் பி.சி.ஆர். சோதனைகளை கணிசமாக அதிகரிக்கும்போது அதிகளவான தொற்றாளர்கள் கண்டறியப்படுகின்றனர். எனவே பி.சி.ஆர். சோதனைகளை தொடர்ந்தும் அதிகரிப்பதன் ஊடாக அதிலும் எழுமாற்று பி.சி.ஆர். சோதனைகளை அதிகரிப்பதன் ஊடாக நாட்டில் உள்ள உண்மையான தொற்றாளர்களை அடையாளப்படுத்த முடியும் என்றார். (ம-ஓ,5)

## தடுப்பூசி வழங்கலில்....

பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இவ்வாறு கூறினார்.

'தவறுகள் அடையாளம் காணப்பட்டதால், தடுப்பூசி ஏற்றலை எதிர்காலத்தில் மிகவும் பயனுள்ள முறையில் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்' - என்றார். (ஒ.5,இ)

## தடுப்பூசி....

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்தன, சகல மாகாணப் பணிப்பாளர்களுக்கும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதற்கு அமைவாக, 60 வயதுக்கு மேற்பட்டோர் முன்னுரிமைப்பட்டியலில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளனர். முதியோர் இல்லங்களில் இருப்போர் இரண்டாவதாக உள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார் மூன்றாவதாக உள்ளனர். முன்களப் பணியாளர்கள் நான்காவதாக உள்ளனர். ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றுவோர் ஐந்தாவதாக முன்னுரிமைப் பட்டியலில் உள்ளனர்.

30 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டோர் தடுப்பூசி ஏற்றல் முன்னுரிமைப் பட்டியலில் கடைசி இடத்துக்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-ஒ,5)

## மகனைத்....

ழந்தார். 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர் ஒருவரினதும், வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஊடகப்பேச்சாளரதும் தாயாரான தேவகி புற்றுநோயா நேற்று உயிரிழந்தார்.

வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்ட அவர் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகத் தேடியலைந்திருந்த நிலையில் மகனைக் காணாமலேயே நேற்று அவரின் உயிர் பிரிந்தது. (ம)

## இயற்கை...

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஐவர் காயமடைந்துள்ளனர் எனவும், மூவர் காணாமல்போயுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10 மாவட்டங்களில் 67 ஆயிரத்து 564 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 70 ஆயிரத்து 902 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 935 வீடுகள் பகுதியளவும், 15 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன எனவும் மேற்படி மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா, இரத்தினபுரி, கொழும்பு, புத்தளம், களுத்துறை, நுவரெலியா, கேகாலை, காலி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் வாழ்பவர்களே சீரற்ற காலநிலையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-22)

## யாழ்ப்பாணத்தில்...

இரண்டு நாள்களில் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50ஆக அதிகரித்துள்ளது.

கொக்குவிலைச் சேர்ந்த 85 வயதுடைய வயோதிபரும், அளவெட்டியைச் சேர்ந்த 65 வயதுடைய நபருமே யாழ்ப்பாணத்தில் கடந்த இரு நாள்களில் உயிரிழந்த நபர்களாவர். (ம-26)

## கொரோனா 2,976

திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 5 ஆயிரத்து 333ஆக எகிறியுள்ளது.

வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சைபெறுபவர்களின் எண்ணிக்கை 36 ஆயிரத்து 333ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 67 ஆயிரத்து 304ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

## கொரோனாத்...

ளுக்குச் செல்ல நேற்று மறுப்புத் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

சுன்னாகத்தில் நேற்றுமுன்தினம் 10 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டுசெல்ல நேற்றுக்காலை அம்புலன்ஸ் வண்டிகள் அனுப்பிவைக்கப்பட்டன.

எனினும் தொற்றாளர்கள் சிகிச்சை நிலையத்துக்கு செல்ல மறுப்புத் தெரிவித்தனர். சுகாதாரப் பரிசோதகர்கள் எவ்வளவு போராடியும் அவர்கள் சிகிச்சைக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்ததை அடுத்து இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து அவர்களை சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைத்தனர். (ம-26)

## பயணத்தடையை...

பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். அப்பகுதியில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் சம்பந்தப்பட்ட நபர்களைத் தனிமைப்படுத்தி வழிநடத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொலிஸாருக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பயணத் தடைகள் விதிக்கப்பட்டுள்ள காலகட்டத்தில் கொழும்புக்குள் நுழையும் வாகனங்களுக்கு இன்று முதல் வழங்கப்படும் புதிய ஸ்டிக்கர் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண விளக்கினார்.

இந்தத் திட்டத்தின் கீழ், 11 பிரிவுகளின் கீழ் கொழும்புக்குள் நுழையும் வாகனங்களுக்கு 11 வர்ண ஸ்டிக்கர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

'நாங்கள் 11 வகையான ஸ்டிக்கர்களை தயார்செய்துள்ளோம். சுகாதார சேவையாளர்களுக்கு பச்சை ஸ்டிக்கர். முப்படைகள் மற்றும் பொலிஸ் வாகனங்களுக்கு வெளிர் நீல நிறம். அத்தியாவசிய சேவைகளை வழங்கும் தனியார் துறையில் உள்ளவர்களுக்கு ஊதா நிறம். இறக்குமதி, ஏற்றுமதி, உற்பத்தி, தொழிற்சாலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு வெளிர் பழுப்பு நிறம்.

அத்தியாவசியப் பொருள்கள் வழங்குபவர்களுக்கு மஞ்சள் நிறம். பொருள் விநியோகத்துக்கு சிவப்பு நிறம், ஊடக மற்றும் தகவல் தொடர்பு நிறுவனங்களுக்காக ஒரேஞ்ச் நிறம்.

குடியேற்றம் தொடர்பான வேலைக்கு வெள்ளை நிறம், மனிதாபிமான காரணங்களுக்கு கறுப்பு நிறம் (இறுதி சடங்கு, மருத்துவ பரிசோதனை, மருந்து), சமைத்த உணவு விநியோக சேவைகளுக்கு சாம்பல் நிறம், பொதுத்துறையில் மற்ற கடமைகளுக்கு சிறப்பு வர்ண ஸ்டிக்கர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் மீண்டும் நீக்கப்படும் வரை இந்த ஸ்டிக்கர் செல்லுபடியாகும். ஒரு வாகனத்தில் 5 நபர்கள் பயணம் செய்கிறார்கள் என்று சம்பந்தப்பட்ட ஸ்டிக்கரில் குறிப்பிட்ட பின்னர் 6 நபர்களை ஒரு வாகனத்தில் கொண்டுசெல்ல முடியாது. அவர்களின் சேவை அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் நிறுவனம் வழங்கிய கடிதத்தை சரிபார்த்த பிறகு இந்த ஸ்டிக்கர் வழங்கப்படுகின்றது.

அதன்படி, இன்று காலை கொழும்புக்குள் நுழையும் பகுதிகளில் வீதித் தடைகளில் இந்த ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்படுவதால் தாமதம் ஏற்படலாம். அப்போது சரியான நேரத்தில் அலுவலகத்துக்குச் செல்ல விரும்புவோர் காலையில் வர வேண்டும்.

இன்று ஸ்டிக்கரைப் பெற முடியாதவர்கள் அதை மறுநாளும் பெறமுடியும். இந்த ஸ்டிக்கர் கொண்ட வாகனம் மற்றவர்கள் அதில் பயணம் செய்தால் - மற்ற நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டால் அது கடுமையான குற்றம்.

இதுபோன்ற வாகனங்கள் பொலிஸ் காவலில் எடுக்கப்படுகின்றன.

இந்தப் புதிய திட்டத்தை செயற்படுத்தத் தொடங்கும்போது இன்று கொழும்பைச் சுற்றி சில போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடும் என்பதால் அவசர கடமைகளுக்காக கொழும்புக்குள் நுழையும் வாகனங்கள் வழக்கத்தை விட முன்னதாகவே வரவேண்டும்' என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தொடர் மூலம் ஈழப் போராட்டத்தை மலினப்படுத்தாதீர்கள்

## சீமான் கோரிக்கை



சென்னை,ஜூன் 7

**தமிழர்களைச் சீண்டும் நோக்கில் திட்டமிட்ட வன்மத்தோடு, 'த பமிலி மேன் 2' எனும் இணையத்தொடர் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வீரம் செறிந்த ஈழ விடுதலைப் போராட்டத்தை மலினப்படுத்தி, கொச்சைப்படுத்த வேண்டாம்.**

இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழர்களின் தாயகத்தை மொத்தமாய் ஆக்கிரமித்து, ஆதிக்கம் செய்து, அழித்தொழித்த அரச பயங்கரவாதிகளான சிங்கள ஆட்சியாளர்களின் குரல் போல ஒலித்து, தமிழர்களை மிகக் கீழ்த்தரமாகக் காட்டி, போர் வெறி கொண்ட பயங்கரவாதிகளாவும், தீவிரவாதிகளாகவும் சித்தரிக்க முற்படும் வகையில் இணையத்தொடரை உருவாக்கியிருப்பது வன்மையான கண்டனத்துக்குரியது.

ஈழ விடுதலைப் போராட்டம் தொடர்பில் மிகத் தவறான புரிதலை ஏனைய இனங்களிடையே உருவாக்கி, எம்மினத்தின் விடுதலைப்போரை வன்முறைப் வெறியாட்டமாகவும், பயங்கரவாதப் போராகவும் காட்ட முனைகின்ற செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

ஆகவே, தமிழர்களையும், தமிழர்களின் வீரம்செறிந்த ஈழ விடுதலைப் போராட்டத்தையும் மிகமிக இழிவாகச் சித்தரித்து அதனைத் தவறாகக் காட்சிப்படுத்தியிருக்கும், இந்த இணையத்தொடரை முற்றாகத் தடைசெய்ய வேண்டும்.

அதனைச் செய்யாவிட்டால், சட்ட ரீதியாகவும், ஜனநாயக பூர்வமாகவும் அதற்கு எதிராக களமிறங்கி தடுத்து நிறுத்துவோம் - என்றுள்ளார். (எ-4)

English Classes
Zoom மூலம்
Gr 5 - O/L
Grammar with syllabus
Tp.No: 077 331 4608

# ஹெரோய்ன் கடத்தல்; பெண் உள்ளிட்ட ஐவர் நேற்று கைது

கொழும்பு, ஜூன் 7

சியம்பலாண்டுவ பகுதியில் வாகனம் ஒன்றில் ஹெரோய்ன் போதைப்பொருளைக் கடத்தியமை தொடர்பில் பெண்ணொருவர் உட்பட ஐந்து பேர் பொலிஸ் விசேட அதிரடிப்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகத்துக்கிடமான வாகனம் ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது அதிலிருந்து 151 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் வாகனத்தின் சாரதி மற்றும் அதில் பயணித்த அனைவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள நபர்களுள் பெண்ணொருவரும் உள்ளடங்குகின்றார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர் - என்றார். (ப-இ)

# மே மாத கடை வாடகையை வர்த்தகர்களிடம் அறவிடாதீர்

## உரிமையாளர்களுக்கு மூதூர் தவிசாளர் வேண்டுகோள்

திருமலை, ஜூன் 7

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களிடம் இருந்து, மே மாதத்துக்கான கடை வாடகையை அறவிட வேண்டாம் என்று மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எம்.ஏ.அறூஸ் கடைகளின் உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மூதூர் மற்றும் தோப்பூர் உட்பட பல பிரதேசங்களில் கடையடைப்பு தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகள் ஒழுங்காக வியாபாரம்செய்ய முடியாமல் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருவது யாவரும் அறிந்த விடயமே. இதனைக் கருத்திற்கொண்டு எமது மூதூர் பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களிடமிருந்து மே மாதத்துக்கான வாடகை அறவிடாமல் இருப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல ஏனைய தனியார் கடை உரிமையாளர்களும் மே மாத வாடகையை உங்கள் கடை வர்த்தகர்களிடம் இருந்து அறவிடாமல் அவர்களின் நிர்க்கதியான சூழ்நிலையை கரிசனையுடன் நோக்கி, நியாயமான முறையில் நடந்துகொள்ளுமாறு அனைத்து கடை உரிமையாளர்களிடமும் வேண்டிக்கொள்கின்றேன் - என்றார்.

இதேவேளை மூதூர் வர்த்தக சங்கத்தாலும், குறித்த விடயம் தொடர்பான வேண்டுகோள் கடை உரிமையாளர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-இ)

# கருவாடுகளின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 7



கருவாடுகளின் விலை அதிகரித்துள்ளது என்று கொழும்பு புறக்கோட்டை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்படும் நாடுகளில் கருவாடுகளுக்கான தட்டுப்பாடு மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடு ஆகியவற்றால் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டை சந்தையில் 300 ரூபா முதல் 400 ரூபாவுக்கு இடைப் பட்ட விலையில் விற்பனைசெய்யப்பட்ட ஒரு கிலோகிராம் பலயா கருவாடு, 500 ரூபா முதல் 700 ரூபாவுக்கும், 250 ரூபா முதல் 300 ரூபா வரை விற்பனைசெய்யப்பட்ட லீன்னா கருவாடு 500 ரூபாவுக்கும், 400 ரூபா முதல் 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட ஈரான் காய்ந்த நெத்தலி ஒரு கிலோகிராம் 500 ரூபா முதல் 580 ரூபா வரைக்கும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, 400 ரூபா முதல் 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட தாய்லாந்து நெத்தலி ஒரு கிலோக்கிராமின் தற்போதைய விலை, 600 ரூபா முதல் 650 ரூபா வரைக்கும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# சவூதியில் விபத்து இலங்கையர் சாவு

கொழும்பு, ஜூன் 7


சவூதி அரேபியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அல் மராய் நிறுவனத்தில் பணியாற்றிய, ஏறாவூரைச் சேர்ந்த நபரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் சவூதி அரேபியாவில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (எ-4)

# ஆமைகள், டொல்பின் இறந்து கரையொதுங்கின

கொழும்பு, ஜூன் 7



இந்துருவா, கொஸ்கொடா, வாதுவ, தெஹிவளை மற்றும் பயகல கடற்கரைகளில் இறந்த நிலையில், ஆமைகள், மற்றும் டொல்பின் ஆகியவை கரையொதுங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

6 கடல் ஆமைகள் மற்றும் ஒரு டொல்பின் ஆகியவையே இவ்வாறு இறந்த நிலையில கரையொதுங்கியுள்ளன. சீரற்ற காலநிலை நிலவுகின்ற நிலையில் இவ்வாறு ஆமைகள் மற்றும் டொல்பின் இறந்து கரையொதுங்குவது தொடர்பில் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ப-இ)

# கமத்தொழில் அமைச்சுக்கு புதிய செயலாளர்

கொழும்பு,ஜூன் 7

கமத்தொழில் அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் செயலாளராகக் கடமையாற்றிய ரோஹண புஷ்பகுமார, தனிப்பட்ட காரணத்துக்காக பதவி விலகியுள்ளதை அடுத்து, புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் கமத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக வயம்ப பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ப-4)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-488 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 07.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org